Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 040 | செவ்வாய்க்கிழமை | மார்கழி 21 ஆம் நாள் 05 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பல்கலைக்கழக மாணவர் 7 பேரின் தடை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜன.5

பகிடிவதைக் குற்றச்சாட்டில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 7 பேரின் வகுப்புத் தடை, துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவால் மனிதாபி 19

## மந்திகை மருத்துவமனைக்கு
# சிகிச்சைக்குச் சென்றவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

- புதிய கொத்தணி உருவாகும் அபாயம்
- தொற்றின் மூலத்தை கண்டறிவதில் சிக்கல்
- சமூகப் பரலாகும் என்று எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜனவரி 5

மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதை அறிய முடியாதுள்ள நிலையில், புதிய கொரோனாக் கொத்தணி ஒன்று உருவாகலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. 19

## சுமந்திரன் கூறியது முற்றிலும் பொய்!

விவரிக்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜன.5

ஐ. நா. மனித உரிமைகள் சபை கூட்டத் தொடர் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தான் தயாரித்து என்னால் நிராகரிக்கப்பட்ட வரைபுக்கு நான் தற்போது அனுமதி அளித்துள் 19

## பொறுப்புக்கூறல் விடயத்தில் தனது நகர்வுகள் தோல்வி

ஒப்புக்கொண்டார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன.5

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசை பொறுப்புக் கூற வைப்பது தொடர்பில் தாம் முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்து 19

## வடக்கில் எழுவருக்கு நேற்று தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜன.5

வடக்கில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று 641 20

## கர்ப்பிணிக்கு கொரோனா தொற்று மூலம் மர்மம்!

வவுனியா, ஜன.5

வவுனியா பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்ற கர்ப்பிணிப் பெண் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று இருப்பது அறியப்பட்டதை அடுத்து, அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை 19

## ஐ.நா. மனித உரிமை சபைக்குள் பொறுப்பு கூறலை முடக்காதீர்!

உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்துவோம் என கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

பொறுப்புக் கூறல் விடயத்தை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினுள் முடக்கி வைக்க வேண்டாம். இந்தக் கோரிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளி 19

## 'பாஸ்' இல்லையேல் 'பனிஸ்மென்ட்'

நாச்சிக்குடாவில் கடற்படை அடாத்து; மீனவர்கள் கவலை

பூநகரி, ஜன.5

போர் முடிந்து 11 வருடங்கள் கடந்த நிலையில் இன்னும் நாச்சிக்குடா கடற்படையினர் தமது கெடுபிடிகளைக் குறைக்கவேயில்லை என்று அந்தப் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். 20

## வல்வெட்டித்துறை மீனவர் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல்!

வடமராட்சி, ஜன. 5

வல்வெட்டித்துறை மீனவர் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று வல்வெட்டித் துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்ப 20

## ஜெய்சங்கர் திடீர் வருகை பரபரப்பில் கொழும்பு

கோத்தாபய, மஹிந்த, சம்பந்தனுடன் பேச்சு

கொழும்பு, ஜன.5

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு வருகிறார். அவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். 19



## கொரோனாச் சாவு 215 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன.5

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவை 20

## மயங்கி வீழ்ந்த மூதாட்டி சாவு!

சாவகச்சேரி, ஜன.5

மயங்கி வீழ்ந்த மூதாட்டி, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் 20

## கருத்துரிமையைப் பறிக்கவே உதயன் மீதான அடக்குமுறை

எச்சரிக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜன.5

ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீது கைவைத்திருப்பதானது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்திச் செல்வதற்கான முயற்சியாகும். இதை அனைவரும் எதிர்க்க முன்வரவேண் 20

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு

# புனர்வாழ்வளிக்க முடியாவிடில் பிணையிலாவது விடுவியுங்கள்

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கோரிக்கை

**மன்னார், ஜன. 5**

**அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு முழுமையான கவனம் செலுத்தி அவர்களைச் சிறைச்சாலைகளிலிருந்து விடுவித்து புனர்வாழ்வு அளிக்கவேண்டும். அல்லது அவர்கள் உடனடியாக பிணையில் செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.**

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தொடர் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து வருகின்றனர். எனினும், அரசியல் கைதிகளின் விடுதலை இன்னுமில்லை. மிருசுவிலில் பகுதியில் பொதுமக்களைக் கொலைசெய்த இராணுவ சிப்பாய் மற்றும் ஆயுதங்களுடன் பிடிபட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பௌத்த மதகுரு ஆகியோரை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். ஆனால், சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று மிகவேகமாக பரவி அரசியல் கைதிகளில் உயிர்களுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதும், அவர்களை விடுவிப்பது பற்றி அரசு மௌனம் காக்கின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். அது பற்றி முயற்சிகள் தொடர்பாக அவரிடம் கேட்கவுள்ளோம்.

**ஜெனிவா**

இந்த வருட ஜெனிவா கூட்டத்தொடர் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு பிரதானமான விடையமாகவுள்ளது. அனைத்து தமிழ் தரப்புக்களும் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை தமிழர் தரப்பாக ஒரே கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை ஒரு மாதத்துக்கு முன்பு முன்வைக்கப்பட்டது.

இதன்போது கட்சியிலிருந்த அனைவரும் குறித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருந்தனர். எனினும், நாங்கள்எங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களையும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளோம். என்றார். (த56)

## வீதியோரம் வந்தது கிளைமோர் குண்டு



மட்டக்களப்பு ஜன. 5

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் முல்லை வீதி கண்ணகிபுரம் பகுதியில் வீதியோரமாக கிளைமோர் குண்டு ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸார், சித்தாண்டி இராணுவ முகாம் அதிகாரிகள் மற்றும் விஷேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கிளைமோர் குண்டு அந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டது.

கிளைமோர் குண்டை அந்த இடத்தில் யாராவது மறைத்துவைத்தார்களா?, வைத்திருந்தால் யார் வைத்திருப்பார்கள் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தஇ)

## தங்கூசி வலையுடன் 5 மீனவர்கள் கைது

கிளிநொச்சி, ஜன. 5

கிளிநொச்சி பூநகரி மண்டைக்கல்லாற்றை அண்டிய கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப்பயன்படுத்தினரென்று ஐந்து மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார்கள் என்றும் அவர்கள் பள்ளிக்குடாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த113)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் முல்லையில் ஒருவர் காயம்

முல்லைத்தீவு, ஜன. 5

முல்லைத்தீவு - விசுவமடு ரெட்பானா பகுதியில் நேற்று அதிகாலை கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

ரெட்பானா பகுதியைச் சேர்ந்த என்.திலீபன் (வயது 33) என்ற நபரே காயமடைந்தவராவார். அவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம113)

## இலங்கை மீது தீர்மானம் வர கட்சிகள் இணையவேண்டும்

**கூட்டணி உறுப்பினர் கோரிக்கை**

யாழ்ப்பாணம், ஜன. 5

தத்தமது தனிப்பட்ட நலன்களைக் கைவிட்டு ஐ.நாவில் இலங்கை தொடர்பில் பொதுத் தீர்மானமொன்றைக் கொண்டுவர தேசியம் சார்ந்து செயற்படும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகரான அரவிந்தன் வலியுறுத்தினார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இதேவேளை, பொதுவான இணக்கப்பாடொன்றை தோற்றுவிக்க பாடுபடும் சிவில் தரப்புக்கள் மீது சிலர் உள்நோக்கங்கொண்டு, விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொள் கின்றனர், அதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க இலங்கை அரசு மறுதலித்து வருகின்றது. காணாமல் போனோர் விவகாரம் காலங்கடந்தும் முடிவின்றி இழுபறிப்பட்டுச் செல்கின்றது.

எனவே, வாதப்பிரதிவாதங்கள் தாண்டி மனித உரிமைப் பேரவைக்கு எமது பிரச்சினையைக் கொண்டு சென்று பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுத்தரவேண்டியது வரலாற்றுக் கடமை என்று மேலும் தெரிவித்தார். (த20)

## கிளிநொச்சி விளையாட்டரங்க சீரமைப்புப் பற்றி குழுவினர் ஆராய்வு

கிளிநொச்சி, ஜன. 5

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வதேச விளையாட்டரங்கை சீரமைப்பது பற்றி நேற்று அவதானிக்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவின் பணிப்புக்கமைய நிலைமை அவதானிக்கப்பட்டது.

கிளிநொச்சி விளையாட்டரங்கின் புனரமைப்புப் பணிகளுக்கென நியமிக்கப்பட்ட இணைப்பாளர் பிரியந்த இலங்கசிங்க மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் யுத்கோர்ப் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சந்தானாத் உட்பட பலர்அந்த விளையாட்டரங்குக்கு நேற்றுச் சென்று அரங்கின் நிலைமையை ஆராய்ந்தனர். (தஇ)

## உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சை!

கொடிகாமம், ஜன. 5

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்று தொடக்கம் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளன என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டியம் (தேசிய) இன்று தொடக்கம் 14 வரையும், நாட்டியம் (பரதம்) இன்று தொடக்கம் 13 ஆம் திகதி வரைக்கும், உயிர் முறைமைகள் (தொழில்நுட்பவியல்) 9ஆம் திகதியும், பொறியியல் தொழில் நுட்பவியல் 21 தொடக்கம் 31 வரைக்கும், மனைப் பொருளியல் 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 4ஆம் திகதி வரைக்கும், கீழைத்தேய சங்கீதம் 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 4ஆம் திகதி வரைக்கும், கர்நாடக சங்கீதம் 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 7ஆம் திகதி வரைக்கும், மேலைத்தேய சங்கீதம் 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 4ஆம் திகதி வரைக்கும் நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 4ஆம் திகதி வரைக்கும், நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 4ஆம் திகதி வரைக்கும், நாடகமும் அரங்கியலும் (தமிழ்) 26ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 7ஆம் திகதி வரைக்கும், நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) 26ஆம் 27ஆம் திகதிகளிலும் நடைபெறும். (ம159)

## கத்தி சகிதம் கருணாவிடம் சென்ற நபரால் பரபரப்பு!

கருணாவைச் சந்திப்பதற்காக கத்தியுடன் சென்றவரால் நேற்றுமுன்தினம் பரபரப்பு ஏற்பட்டது. அதையடுத்து அவரைக் கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முரசுமோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் கருணா தங்கியிருந்துள்ளார். அவரைச் சந்திப்பதற்காக சென்றவரை பொலிஸார் மறித்துத் திடீர் விசாரணையை நடத்தியபோதே அவரிடம் இருந்து இரு கத்திகள் மீட்கப்பட்டுள்ளன.'வயலுக்குப் பசளை இடுவதற்காக கத்தியுடன் சென்றேன். வயலில் இருந்து திரும்புகையில் கருணாவைச் சந்தித்துச் செல்லவந்தேன்' என்று கைதான நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம214.6)

# கோத்தாபயவினது ஆட்சியில் தேர்தல் பணியில் இராணுவம்

## சர்வாதிகாரத்தின் உச்ச நிலைமை என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 5**

**மாவட்டச் செயலாளர்கள் இருக்கையில், நிர்வாகப் பணிகளுக்கு 25 மாவட்டங்களுக்கும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமையானது சர்வாதிகார ஆட்சியின் வெளிப்பாடாகும் என்பதுடன் எதிர்காலத்தில் மேலதிக தேர்தல் ஆணையாளர் பதவிகளுக்கும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டு, அவர்களின் நிர்வாகத்தின்கீழ் தேர்தல் நடத்தப்படக்கூடிய அபாயமும் உள்ளது' இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடம் முடிவடைந்துள்ள நிலையில், நல்லாட்சியின்போது உறுதிசெய்யப்பட்ட ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் சர்வாதிகார வழியிலேயே பயணிக்கின்றது.

இந்நிலையில் 20 நிறைவேறினால் பொறுப்புக்கூறக்கூடிய தலைவர் ஒருவர் இருக்கமாட்டார் எனச் சுட்டிக்காட்டியிருந்தோம். அது தற்போது நடந்து வருகின்றது.

மாவட்ட நிர்வாக அதிகாரத்தை பகிரும் வகையில் 25 இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டுக்கு பொறுப்புக்கூறக்கூடிய அரச அதிகாரிகளின் பொறுப்புகளில் சில, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தமக்கு தேவையானவற்றை செய்வதற்கு கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் முயற்சிக்கின்றது. சர்வாதிகாரப் பயணத்தின் மற்றுமொரு அங்கம்தான் இது - என்றார். (ம-44)

# 3ஆவது அலையால் 200 பேர் உயிரிழப்பு!

## டிசெம்பரில் மட்டும் 18,838 தொற்றாளர்கள்

கொரோனா, ஜன. 5

கொரோனா வைரஸ் தாக்கத்தின் 3ஆவது அலை மூலம் கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் இன்று வரை 41 ஆயிரத்து 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இதில் 200 பேர் உயிரிழந்தனர். மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகள் மூலமே இவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது என கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த நவம்பர் மாதத்தில் 17 ஆயிரத்து 472 பேருக்கும், டிசம்பரில் 18 ஆயிரத்து 838 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

கொரோனா 3ஆவது அலைமூலம் கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் 4 முதல் இன்றுவரை 18 ஆயிரத்து 686 தொற்றாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 648 தொற்றாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 545 தொற்றாளர்களும், யாழ். மாவட்டத்தில் 206 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-44)

# உள்நாட்டு சட்டங்களில் கஞ்சாவுக்கு தளர்வுகள்!

## சுதேச மருத்துவ சங்கம் கோரிக்கை


கொழும்பு. ஜன. 5

கஞ்சா விடயத்தில் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் சட்டங்களில் தளர்வுகளைக் கொண்டுவர வேண்டும் என்று இலங்கை சுதேச மருத்துவ சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இலங்கை சுதேச மருத்துவ சங்கத்தின் சட்ட ஆலோசகர் டெனிஸ்டர் எல் பெரேரா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கஞ்சாவை ஒரு 'ஆபத்தான மருந்து' என்ற நிலையிலிருந்து விலக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதற்கேற்ப இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் சட்டங்களிலும் தளர்வுகளை மேற்கொள்ள வேண்டும். கஞ்சாவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மருந்துகளின் இன்றியமையாத தன்மையைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-இ)



# குளிரூட்டப்பட்ட தேங்காய்கள்; இறக்குமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜன.5

குளிரூட்டப்பட்ட தேங்காய்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டம் இந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து குளிரூட்டப்பட்ட தேங்காய்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என குறித்த அதிகார சபையின் பணிப்பாளர் பி.எதிரிமான்ன தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நிலவிய சீரற்ற கால நிலையால் தேங்காய் உற்பத்தி குறைவடைந்தமையால், தற்போது நாட்டில் தேங்காய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் தேங்காயின் விலையும் சடுதியாக அதிகரித்தது. இந்நிலையில், நாட்டில் தேங்காய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக, தேங்காய் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்காக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ரி5)

# செயலகத்துக்கு முன்பாக மயங்கியவரால் பரபரப்பு

சாவகச்சேரி, ஜன. 5

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் நேற்று சுயநினைவின்றி வீழ்ந்து காணப்பட்டதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அவருக்கு சிலர் தண்ணீர் ஊற்றிய போதிலும் அவர் எழும்பாததால் கொரோனா நோயாளியாக இருக்கலாம் என்று விலகினர்.

இது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அம்புலன்ஸ் மூலமாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனையின் பின்னர், அவருக்கு சந்தேகப்படும்படியாக எந்த நோயும் இல்லை என்றும் அவர் அதிகளவில் போதையில் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து.9)



# மகப்பேறு மருத்துவ சங்கத்தின் 35ஆவது தலைவர் நியமனம்

கொழும்பு, ஜன.5

இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் 35ஆவது தலைவராக விசேட மருத்துவ நிபுணர் பிரதீப் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டப வளாகத்தின் தாமரை மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் 35ஆவது நிர்வாகத் தலைவரின் நியமனம் இடம்பெற்றது. (ப)

# சுற்றுலாப்பயணிகளால் புதிய வைரஸ் பரவலாம்

## தொற்றுநோய் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,ஜன.5

வெளிநாட்டிலிருந்து வருகை தருவோரால் நாட்டுக்குள் புதிய வகை வைரஸ் பரவக்கூடும் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு எச்சரித்துள்ளது.

எனவே, சுற்றுலாப் பயணிகள் சுகாதார வழிமுறைகளை சரியாகப் பின்பற்ற வேண்டும் என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை உக்ரைன் நாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட மேலும் ஒரு குழு நேற்று நாட்டை வந்தடையவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லதொரு தீர்வு கிட்டும்

**சுரேன் ராகவன் நம்பிக்கை**



கொழும்பு, ஜன.5
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் நல்லதொரு தீர்வு நிச்சயம் எட்டப்படும் என வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அரச நாளிதழொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
வடக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளேன். இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும், அது நல்லிணக்க நடைமுறையை பலப்படுத்தும் என்றும் தெளிவுபடுத்தி இருந்தேன். இது தொடர்பாக நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த நேரத்தில் தான் ஈஸ்டர் தின தாக்குதல் நடந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட பின்னடைவால் மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப வேண்டியதாயிற்று. எனினும், ஏதாவதொரு வகையில் தீர்வு விரைவில் வரும் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## போதை விற்ற இருவர் கைது

மட்டக்களப்பு, ஜன.5
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் விற்பனைக்கு அவர்கள் பயன்படுத்திய முச்சக்கரவண்டிகள் இரண்டும், ஹெரோய்ன் போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு நகரில் மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் வைத்து முச்சக்கர வண்டிகள் இரண்டைச் சோதனையிட்ட போது அதிலிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 11 கிராம் மற்றும் 20 கிராம் கொண்ட ஹெரோய்ன் பொட்டலங்கள் மீட்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பி.எஸ். பி.பண்டார தெரிவித்தார். (வ-இ)

### அரசின் அசமந்தத்தால்


# சுற்றுலா கொத்தணி உருவாகும் அபாயம்

*எச்சரிக்கிறார் எம்.பி ஹர்ச டி சில்வா*



**கொழும்பு, ஜன.5**
**அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டால் சுற்றுலாத்துறை கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா எச்சரித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
சுற்றுலாச் சபை தயாரித்த திட்டத்தில் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தியுள்ள நாடுகளின் பட்டியலில் உக்ரேன் இல்லை. எமது நாட்டில் ஒரு மில்லியனுக்கு ஒருவர் கொவிட்19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் நிலையில் உக்ரேனில் ஒரு மில்லியன் பேரில் 430 பேர் உயிரிழக்கின்றனர். அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலால் சுற்றுலாத்துறை ஊடாக கொவிட்19 வைரஸ் கொத்தணி உருவாகும் அபாயம் காணப்படுகிறது. கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் வெளிநாட்டவர்களுக்கு சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது. மறுபுறம் நாட்டு மக்கள் சிறைக் கைதிகளைப் போன்று பார்க்கப்படுகிறார்கள் எனத் தெரிவித்தார். (வ-இ)



## கிரிக்கெட் சபையின் ஊழியருக்கு தொற்று

கொழும்பு, ஜன.5
இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழியர் ஒருவருக்கு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.
அவருடன் நெருங்கி பழகிய அனைவருக்கும் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எவருக்கும் தொற்று உறுதியாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஹற்றனின் நால்வருக்கு கொரோனா


கொழும்பு, ஜன.5
ஹற்றன் டிக்கோயா நகர சபை உறுப்பினர் உட்பட நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என பொதுச் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.
நேற்று முன்தினம் காலை வெளியாகிய பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையிலேயே இந்த நால்வருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது எனவும் இவர்களை சுயதனிமை மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# சுற்றிவளைக்கப்பட்டன கஞ்சாத் தோட்டங்கள்

கொழும்பு, ஜன.5
தணமல்வில, பொத்துவில் ஆகிய பகுதிகளில் கஞ்சாத் தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டு மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
தணமல்வில கல்கொட்டுகந்த பகுதியில் நேற்று மூன்று கஞ்சா தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டன. அங்கு 17 ஆயிரம் கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேக நபர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை பொத்துவில் பத்மிட்டியாவ பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 4 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட கஞ்சாத் தோட்டம் சுற்றிவளைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டுள்ளன. (வ-இ)





# மண்டல பூசை

வவுனியா, ஜன. 5
வவுனியா ஐயனார் ஆலயத்தில் மண்டல பூசை மிகவும் சிறப்பான முறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
வவுனியா தாண்டிக்குளம் ஸ்ரீ அற்புத ஐயனார் ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தின் இரண்டாம் நாள் பூசை உற்சவம் மற்றும் ஐயப்ப மண்டல பூசை சுகாதார முறைப்படி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன் போது ஐயனார், ஐயப்பனுக்கு விசேட ஆராதனையும், அபிசேகமும் நடைபெற்றது. (ரி5-110)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேங்காய்க்கு ஒரு நீதி; மஞ்சளுக்கு இன்னொரு நீதியா?

இலங்கையில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து அதை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளது அரசு. இதன் முதல் கட்டமாக குளிரூட்டப்பட்ட தேங்காய்களை மாலைதீவு, பிலிப்பைன்ஸ், வியட்நாமில் இருந்து கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது கோத்தாபய அரசின் முன்பின் முரணாண நடவடிக்கைக்கு இன்னுமொரு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டு.

மஞ்சள் விடயத்தில் கோத்தாபய அரசு கொண்டுள்ள கடும் போக்கு அனைவரும் அறிந்ததே. இதுவரை காலமும் இலங்கை மக்கள் பயன்படுத்திய மஞ்சளின் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்பட்டே, நுகர்ச்சிக்கு விடப்பட்டது. ஆனால் கொரோனாவுக்கு பின்னர், உள்நாட்டில் மஞ்சளை உற்பத்தி செய்கின்றோம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட நகர்வுகள் காரணமாக மருந்துக்கும் மஞ்சள் இல்லை என்றாகிவிட்டது. வகைதொகை இன்றி எகிறியுள்ளது மஞ்சள் விலை. எத்தனையோ அழுத்தங்கள் வழங்கப்பட்ட - வழங்கப்படுகின்ற போதிலும் இந்த அரசு அதை இறக்குமதி செய்ய முன்வரவேயில்லை. கஞ்சாவைப் போல கடத்தல் பொருளாக மஞ்சளை மாற்றிச் சாதனை படைத்தது இலங்கை அரசு. என்ன நடந்தாலும் மஞ்சளை இறக்குமதி செய்யவே மாட்டோம் என்று ஒற்றைக்காலில் நிற்கும் அரசு தேங்காய் விடயத்தில் மட்டும் ஏன் தலைகீழாக நிற்கின்றது என்பது புரியாத புதிர்தான்.


இலங்கையில் தென்னைகளுக்குப் பஞ்சமேயில்லை. தேங்காயைப் பொறுத்த மட்டில் ஆகச்சிறந்த தன்னிறைவை எமது நாடு கொண்டிருந்தது. இங்கிருந்து தேங்காய்ப்பால் பவுடர், தேங்காய்ப்பால் , தெங்கு உற்பத்திகள் என ஏற்றுமதிகளும் இடம்பெற்றன. இவ்வாறிருக்கையில் எந்த அடிப்படையில் தேங்காயை இறக்குமதி செய்யும் முடிவுக்கு இந்த அரசு சென்றது என்பதை துறைசார் அமைச்சர்கள், அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

தேங்காயின் விளைச்சல் குறைந்ததாலேயே இந்த முடிவு என்று சொல்லப்படுகின்றது. அப்படியாயின் அதைச் சரிசெய்யவல்லவா பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். விளைச்சல் குறைந்த தென்னைகளைப் பசளையிட்டு, வளப்படுத்தி நல்ல அறுவடையைப் பெறுவதற்கு வெறும் மூன்று மாத காலம் போதும் என்கின்றன தரவுகள். இதைவிட மண்ணில் புதிதாக நட்டு, ஒரு வருடத்திலேயே காய்க்கும் தென்னை இனங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறிருக்கையில் இறக்குமதி என்ற எண்ணம் எதற்கு?. மஞ்சளைப் பயிரிட்டு அதை வளர்த்து அதன் அறுவடை வரையில் காத்திருக்க - மக்களை காத்திருக்க வைக்கத்தெரிந்த அரசால் வெறும் மூன்று மாதங்களில் மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேங்காய் உற்பத்திகளை நிறைவேற்ற முடியாமல் போனது என்பது ஏதோ மர்மம்தான்.

ஆக, மஞ்சள் செய்கைக்குப் புதியவர்கள் ஆர்வம் காட்டவேண்டும், அதில் முதலிட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசு, ஏற்கனவே உள்ள தெங்குச் செய்கையாளர்களைப்பற்றி ஏன் எண்ணவில்லை. இந்த இறக்குமதிகளால் அவர்களின் உற்பத்திகள் பாதிக்கப்படலாம் என்று ஏன் எண்ணம்கொள்ளவில்லை. புதிய முதலீட்டாளர்களை ஒரு புறத்தில் உருவாக்கிவிட்டு மறுபுறத்தில் ஏற்கனவே இருக்கும் முதலீட்டாளர்களை - உற்பத்தியாளர்களை அரசு படுகுழியில் தள்ளியுள்ளது.

தெங்கு என்பது இலங்கையின் பெரும் வளம். இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருந்த தெங்குப் பொருள்களை இறக்குமதி செய்யும் நிலை எப்படி வந்தது என்று ஆராயாமல், இப்படி பிற நாடுகளில் இருந்து வாங்குவதே தீர்வென நினைக்கிறது அரசு. ஆனால் அது மிகப்பெரிய பொருளாதாரச் சரிவுக்குள் இலங்கையை நிரந்தரமாகத் தள்ளிவிடும். காய்ச்சலுக்கு பனடோல் போட்டால் மாறக்கூடும்.ஆனால் காய்ச்சலுக்கு காரணமான நோயைக் கண்டுபிடிக்கத் தவறினால், அது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கிவிடும்.அது போலவே இப்போது எழுந்துள்ள தேங்காய்த்தட்டுப்பாடுக்கு தீர்வாக, பனடோலாக ,இறக்குமதி முன்வைக்கப்பட்டிருக்கிறது போலும்.தேங்காய் இறக்குமதி தொடருமானால் அது இலங்கைக்கு பெரும் அபாய ஒலியையே எழுப்பும். மஞ்சளுக்கு ஒரு நீதி, தேங்காய்க்கு இன்னொரு நீதி கொடுக்கும் இந்த அரசின் மதியீனத்தை என்னவென்பது?

## இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - நாமல் அமரசிங்க

# கிளிநொச்சியில் நலிவுற்ற சமூகமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

### சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் சுமார் 95 வீதமானவை மிக மோசமாக நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றன என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போர், நோய், விபத்து, கணவனால் கைவிடப்பட்டவர்கள், போன்ற பல்வேறு நிலைகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக கிளிநொச்சியில் பல குடும்பங்கள் உள்ளன. அவர்களில் பெரும்பாலானவர்கள் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

போருக்குப் பின்னரான காலத்தில் பெண்களுக்காக அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் பல செயற்பட்டபோதும் அவர்களின் வாழ்க்கையில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்றிட்டங்கள் அமையவில்லை என்றும் வெறுமனே வாழ்வாதார உதவிகள், பயிற்சிகள், சுயதொழில் உதவிகள் என பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் அவை பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கையில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்த வில்லை என்றும் சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-214)

# நவம்பர் மாதத்துக்கு முன்னர் அரசமைப்பின் முதலாவது வரைவு

### உதய கம்மன்பில நம்பிக்கை



கொழும்பு, ஜன.5

எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பின் முதலாவது வரைபை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாணசபை முறைமை அவசியமா இல்லையா என்பது குறித்து அரசில் சாதக மற்றும் பாதகமான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த விடயம் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. எனினும் எதிர்க்கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இன்று மாகாணசபைத் தேர்தலைச் சாட்டாக வைத்து விமர்சனக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. மாகாணசபைகள் இன்று காலாவதியாகியுள்ளமைக்கு முன்னைய அரசும் அவர்களுக்குத் துணைநின்ற தமிழ், முஸ்லிம் கட்சிகளுமே காரணம். வடக்கு தமிழ் மக்கள் இன்று நெருக்கடியைச் சந்திக்கவும், கிழக்கில் முஸ்லிம் மக்கள் நெருக்கடியை சந்திக்கவும் முன்னைய ரணில்-மைத்திரி ஆட்சியை ஆதரித்து அவர்களுக்குத் துணை நின்றவர்களே காரணம். இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் புதிய அரசமைப்புக்கான ஆரம்ப வரைபு முன்வைக்கப்படும். இது தொடர்பில் சகல கட்சிகள், சிவில் அமைப்புகள் எனச் சகலரது கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும் - என்றார். (ப)

# பெண்ணுக்கு கொரோனா; 8 குடும்பங்கள் தனிமையில்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 8 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் என். சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகினார். மருதனார் மடம் கொத்தணியுடன் தொடர்புபட்ட நிலையிலேயே அவரும் தொற்றுக்குள்ளானார் என்று நேற்று முன்தினம் அடையாளப்படுத்தப்பட்டார். இந்த நிலையிலேயே அந்தப் பெண்ணுடன் தொடர்புடைய 8 குடும்பங்கள் சுய தனி மைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (ப-113)

# ஒரே இலக்கங்களில் இரு லொத்தர் சீட்டு

கொழும்பு, ஜன. 5
தேசிய லொத்தர் சபையின் தொழில்நுட்பப் பிரிவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே மாதிரியான இலக்கங்களைக் கொண்ட இரண்டு லொத்தர் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 31ஆம் திகதி இந்த லொத்தர் சீட்டுகள் வெளியாகியுள்ளமையை தேசிய லொத்தர் சபையின் தொழில்நுட்பப் பிரிவு ஏற்றுக் கொண்டுள்ளது என்று அதன் செயற்பாட்டாளர் கெலும் பிரியங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மஹஜன சம்பத லொத்தர் சீட்டு அச்சிடும், அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் உள்ள குறைப்பாடுகளே இதற்குக் காரணமாகும். இதன் பின்னர் அவ்வாறான லொத்தர் சீட்டு அச்சிடுவதைத் தவிர்ப்பதற்காக தகுதியான வேலைத்திட்டத்தை உருவாக்க ணிப்பதற்கு தேசிய லொத்தர் சபையால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு போதும் நடக்கக்கூடாத தவறாகும். ஏதோ ஒரு இடத்தில் அந்த லொத்தர் சீட்டுக்குப் பரிசு கிடைத்திருந்தால் இரண்டு லொத்தர் சீட்டுகளுக்கும் பணம் வழங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். என்றார். (ப)

# தனிமைப்படுத்தல் நடைமுறை தொடரும்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5
புதிய சிறிய கொத்தணிகள் உருவாகக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே சில பகுதிகளுக்கான தனிமைப்படுத்தலை முடிவுக்கு கொண்டு வரமுடியாத நிலை காணப்படுகிறது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
சில பகுதிகள் நீண்ட காலமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதனால் புதிய கொத்தணி குறித்த அச்சம் காணப்படுகின்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சுகாதார வழிமுறைகளை உரிய விதத்தில் பின்பற்றினால் தனிமைப்படுத்தலை முடிவுக்கு கொண்டுவரலாம். தனிமைப்படுத்தல் தொடர்வதால் சிலர் நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடும். எனவே அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பொறுமையாக இருக்கவேண்டும் என்றார். (ப)

# தாய்க்கும் மகளுக்கும் கொரோனா

நுவரெலியா, ஜன.5
டிக்கோயா இன்ஜஸ்ட்ரி தோட்டம் பீரட் பிரிவில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அப் பகுதியைச் சேர்ந்த 12 குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

தாயொருத்தர் மற்றும் மகளுக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# வர்த்தமானியை திருத்தினாலேயே சடலங்களை அடக்கம் செய்யலாம்

## சுற்றாடல் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.5**

**கொரோனாத் தொற்றில் மரணிப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்யவேண்டும் என்ற வர்த்தமானி அறிவிப்பு தற்போதும் நடைமுறையில் உள்ளது. எனினும் குறித்த வைரஸ் தொடர்பில் விஞ்ஞான அடிப்படையிலான தீர்மானங்களின் பிரகாரம் வர்த்தமானியில் திருத்தம் கொண்டுவரலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
கொரோனாத் தொற்றில் மரணிப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்து வெளியிடப்பட்ட ஆரம்ப வர்த்தமானி அறிவிப்பு தற்போதும் அமுலில் இருக்கின்றது. கொரோனா வைரஸ் தொற்றில் மரணிப்பவர்களை தகனம் செய்யவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது இந்த வைரஸ் பரவலின் ஆரம்பத்திலாகும். அன்றைய நிலைமையைக் கருத்திற் கொண்டு, எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலேயே இருந்தே தகனம் செய்ய மட்டும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மோதங்களின் பின்னர் வைரஸ் தொடர்பில் வெளியாகும் நிலைமையின் பிரகாரம், விஞ்ஞான ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு, அந்தத் தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றும் குறித்த வரத்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்றார். (ப)

# அரச அலுவர்களுக்கு கொலை மிரட்டல்

## நாவற்குழியில் இந்த நிலை

சாவகச்சேரி, ஜன.5
கிராம மட்ட அலுவலகத்துக்கு வருகை தந்த ஐவர் கொண்ட குழு அங்கு கடமையில் இருந்த கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர் ஆகியோருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் நாவற்குழி மேற்கில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத ஐவர் முன்னர் அங்கு கடமையாற்றிய அபிவிருத்தி அலுவலர் குறித்து விசாரித்த பின்னர் அங்கிருந்த அலுவலர்களுக்கு கொலை அச்சுறுத்தல்விடுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதேச செயலருக்கும் சாவகச்சேரி பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப-9)

# விண்ணப்பங்கோரல்

கொழும்பு, ஜன.5
குடும்ப சுகாதார சேவைகள் அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஏதேனுமொரு வருடத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில், ஏதேனும் ஒரு பிரிவில் சித்தியடைந்த மாணவிகளிடமிருந்து (திருமணமாகாதவர்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இணைய வழி மூலமாக எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதிவரை இதற்கு விண்ணப்பிக்க லாம்.

மேலதிக தகவல்களை வர்த்தமானி மற்றும் www.health.gov.lk என்ற இணையதளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். (க)

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.5
கட்டுவன் கரண்டக்குளம் சபரி கிரி ஸ்ரீ ஐயப்பன் கோவில் கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறும்.

தொடர்ந்து 10 தினங்கள் காலையில் மட்டும் திரு விழாக்கள் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், தைப் பொங்கல் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க)



# 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

நெல்லியடி, ஜன.5
நெல்லியடி மாலுசந்தி மைக்கல் நேசக்கரம் அமைப்பினரால் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட நிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கத்தீர்மானிக் கப்பட்டிருந்தது இதன் முதல் கட்ட நிகழ்வே நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ஐ)

# கொரோனா ஒழிப்பு; அரசாங்க அறிவுறுத்தல்களை மீறும் நிறுவனங்கள் கண்டறிவு

கொழும்பு, ஜன.5
கொரோனா ஒழிப்புத் தொடர்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள ஆலோசனைகளை சில நிறுவனங்கள் பின்பற்றாமை தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது; கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில், நிறுவனங்களுக்குள் நுழையும் நபர்கள் தொடர்பான பதிவேடுகளை பராமரித்தல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை கழுவுவதற்கான இடமொன்றை ஒதுக்குதல், உடல் வெப்பத்தை பரிசோதித்து நிறுவனத்துக்குள் அனுமதித்தல் போன்ற விடயங்களைப் பின்பற்றுவது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட வழிமுறைகள் சில நிறுவனங்களில் பின்பற்றப்படுவதில்லை. எனவே நிறுவன பிரதானிகள், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள் உள்ளிட்டவர்கள், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவது அவசியம். இவ்வாறு சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ)

# வாகனங்கள் உட்செல்லத் தடை

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி பொதுச்சந்தைக்குள் எந்த வாகனங்களும் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக வியாபார நடவடிக்கைகள் யாவும் கிளிநொச்சி சந்தையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அனைத்து வியாபார நடவடிக்கைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முன் நடவடிக்கையாக கரைச்சிப் பிரதேச சபையால் கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்துக்குள் எந்த வாகனங்களும் உள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு கரைச்சி பிரதேச சபையினரும், கிளிநொச்சி பொலிஸாரும் அறிவித்துள்ளனர் (ப-ரி)

# அரசியல் அறத்தின் பாற்பாட்டே நல்லூர் சபையில் செயற்பட்டோம்

## த.தே.ப.இயக்கத்தின் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன.5

அரசியல் அறத்தின் பாற்பாட்டே நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் மதுசூதனுக்கு எம்மால் வாக்களிக்க முடியாமல் போனது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;நல்லூர்ப் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பங்காளிக் கட்சியான ரெலோவின் உறுப்பினர் கு. மதுசுதன் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். ஆனால் தவிசாளர் தியாகமூர்த்தி தங்களின் பங்காளிக் கட்சியான தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதும் அவரை வீழ்த்தி தவிசாளராக தாம் வேண்டும் என்ற நோக்கில் இவர் இரண்டு தடவையும் பாதீட்டைத் தோற்கடிப்பதற்குத் தீவிரமாகச் செயற்பட்டிருந்தார். எமது உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் பாதீட்டைத் தோற்கடித்துத் தனக்கு ஆதரவை வழங்குமாறு கேட்டிருந்த இவர் பாதீட்டின்போது அதற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தார். இதனாலேயே அரசியல் அறத்தின் பாற்பாட்டு இவருக்கு எம்மால் வாக்களிக்க முடியாமற் போனது என்றார். (ப)


## வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலியில் இயங்கும் உணவகத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர், ரொட்டி தயாரிப்பவர், பிறைட் றைஸ் தயாரிப்பவர் உடனடியாகத் தேவை.

077 725 9245



## குருக்கள் தேவை

இருபாலை, கட்டப்பிராய்
ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு
மூன்று நேரமும் நித்திய, நைவேத்திய பூசைகள்
செய்வதற்கு பிராமண குலத்தைச் சேர்ந்த குடும்பம் தேவை.
வீட்டு வசதி செய்துகொடுக்கப்படும்
வேதனம் நேரில் பேசி தீர்த்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 809 6181 (தலைவர்)


# வீட்டு விறாந்தைக்கு வந்தது முதலை

சாவகச்சேரி,ஜன.5

வீட்டு விறாந்தைக்கு வந்திருந்த ஏழு அடி நீளமான முதலை அயலவர்களால் பிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சாவகச்சேரி கற்குளியில் இடம்பெற்றது. நள்ளிரவு வேளையில் நாய்கள் குரைத்ததால், வீட்டுக்காரர் மின் விளக்குகளை எரிய விட்டு வெளியே வந்து பார்த்தபோது, முதலை விறாந்தையில் இருந்ததைக் கண்டுள்ளார். அயலவர்களின் உதவியுடன் முதலையைப் பிடித்துக் கட்டி வைத்ததுடன் பொலிஸாருக்கும் அறிவித்தனர். பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவலை தெரியப்படுத்தினர் (க-9)

# கைதிகளை விடுவிக்குமாறு கோரி வட, கிழக்கில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை வடக்கு நடத்தப்படவுள்ளது.

வடக்கு கிழக்கில் போராட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கிலுள்ள சிவில் அமைப்புக்கள் இணைந்து எட்டு மாவட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர், மற்றும் சாவகச்சேரி நகர், கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதி பழைய கச்சேரி முன்றல், மன்னார் மாவட்டத்தில் முருங்கன், மன்னார் நகர் பகுதி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் நகர் பகுதிகளிலும் போராட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

போராட்டத்தில் மதத் தலைவர்கள் , சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், அரசியல் கைதிகளின் உறவுகள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## மாவட்ட செயலகம், கிளிநொச்சி, ஏல விற்பனை

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் மோட்டார் சைக்கிள் ஏலத்தில் விடப்படவுள்ளது.

| | |
|---|---|
| ஏலம் இடம்பெறும் இடம் | - மாவட்ட செயலகம் - கிளிநொச்சி |
| ஏலம் இடம்பெறும் காலம் | - 21.01.2021 வியாழக்கிழமை காலை 11:00 |
| மோட்டார் சைக்கிள் இலக்கம் | - NP-GV-1562 |
| மோட்டார் சைக்கிள் வகை | - Hero Honda-CD 100 SS |

ஏல விற்பனையின் போது வெற்றி பெறுபவர் முழுப் பெறுமதியினையும் காசாகச் செலுத்தி அன்றைய தினம் பி.ப 4:15 மணிக்கு முன்னர் மாவட்ட செயலகத்திலிருந்து அதனை எடுத்துச் செல்லல் வேண்டும். குறித்த மோட்டார் சைக்கிள் 06.01.2021 தொடக்கம் 20.01.2021 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

திருமதி. றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 04 . 1939 | 04 . 01 . 2021 |

**திருமதி வில்லியம் மேரி பிலிப்பா (றூபி)**

அவர்கள் 04.01.2021 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல். 3.00 மணிக்கு யா. புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சவுரி செல்வம்

இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சவுரி செல்வம் நேற்று (04.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவுரி-கதிரி தம்பதியரின் அன்பு மகனும், கமலநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உதயகுமார், மற்றும் சீத்தா காலஞ்சென்ற சுதா மற்றும் கவிதா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,மதி, ஜெகதீஸ்வரன், செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, றோசம்மா, பூமணி, நாகம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, வேலன், நடேசர், நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பேரப்பிள்ளைகளின் பேரனும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வாகனத்தை விட்டு மணல் கொள்ளையர் தப்பியோட்டம்

வடமராட்சியில் நீண்டகாலமாக மணற் கொள்ளையில் ஈடுபட்டுவந்த கும்பலொன்று விசேட அதிரடிப் படையினர் துரத்தியதால் ஹன்டர் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

அதிரடிப் படையினர்சுமார் 5 கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட தூரத்துக்குக் கொள்ளையர்களைக் கலைத்துச் சென்றனர். அதனால் வாகனத்தை விட்டு கொள்ளையர் தப்பித்தனர். வாகனத்தை மீட்ட அதிரடிப்படையினர், பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த26)

# முடக்கப்பட்ட பகுதியினர் நகரத்துக்குள் நடமாட்டம்

## அச்சத்தில் மக்கள்

வவுனியா,ஜன.5

**கொவிட் -19 அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்ட பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த பலர், வவுனியா நகரப்பகுதிக்குள் நடமாடித்திரிவதை அவதானிக்க முடிந்துள்ளது.**

பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் மற்றும் கர்ப்பிணிப்பெண் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அந்தப் பகுதியின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் ஒழுங்கைகள், பட்டக்காட்டின் ஒரு பகுதி, வேப்பங்குளத்தின் ஒரு பகுதி என்பவை சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்டன.

எனினும் அந்தப் பகுதிகள் முடக்கப்படுவதற்கு முன்பாகவே பலர், நகரில் வியாபார நடவடிக்கைளிலும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அரச அலுவலங்களில் வேலை செய்யும் சிலரும் முன்னதாகவே, வெளியேறி கடமை இடங்களுக்குச் சென்றுள்ளனர். இதனால் கொரோனாத் தொற்று பரவலடையலாம் என்ற அச்ச நிலைமை எழுந்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார துறையினரும், பொலிஸாரும் இணைந்து காத்திரமான நடவடிக்கை எடுத்து, வவுனியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வவுனியா நகரப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)



# கல்வி நிலையத்தின் மீது அடாவடி

## பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஜன.5

வவுனியாவில் கடந்த 22 ஆண்டுகளாக தொடர்ச்சியாக இயங்கி வந்த கல்வி நிலையத்தின் கொட்டகை எந்தவொரு அறிவித்தலுமின்றி இனந்தெரியாத ஒருவரால் அடாத்தாகப் பிடுங்கி எறியப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைரவபுளியங்குளம் வீதியில் உள்ள கல்வி நிலையம் ஒன்றின் கொட்டகையே இவ்வாறு பிடுங்கி எறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்வி நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். எனினும் இது தொடர்பில் பொலிஸார் எந்த வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்றும், மாறாக கல்வி நிலையத்தைப் பூட்டியுள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (ப-18)



# சிறுவர் இல்லத்தின் வீதியோர மரநடுகை

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் நடப்பாண்டுக்கான திட்டங்களில் ஒன்றான வீதியோர மரநடுகைத் திட்டத்தின் கீழ் ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலய வீதியிலிருந்து கிளிநொச்சி இந்துக்கல்லூரி வரையான 600 மீற்றர் தூரத்துக்கு வீதியின் இரு மருங்கிலும் மரக் கன்றுகளை நடுவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு முதல் மரக்கன்றை நட்டார். தொடர்ந்து இல்லத்தின் தலைவர் ச.மோகனபவன் மற்றும் உபதலைவர்கள், செயலர்கள், உபசெயலர்கள், நிர்வாக உறுப்பினர்கள், இல்லத்தின் குழந்தைகள் ஆகியோர் மரக் கன்றுகளை நட்டனர். (ப-222)

## போலி அறிக்கையை வழங்கி

# நாட்டை விட்டு தப்பித்த கொரோனா நோயாளி

கொழும்பு, ஜன. 5

மஹரகம சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள எந்தேரமுல்லையைச் சேர்ந்த கொவிட்19 நோயாளி ஒருவர் போலி மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பித்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மஹரகம சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் நிஹால் கமகே தெரிவித்ததாவது:

தனியார் மருத்துவமனையிலிருந்து இரு முரண்பாடான பி.சி.ஆர் சோதனை அறிக்கைகளை குறித்த நபர் பெற்றிருந்தார். அதில் ஒன்று கொரோனாத் தொற்று உள்ளவர் என்றும் மற்றொன்று இல்லையென்றும் வெளிப்படுத்தியது. இதனால் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் புதிய பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. டிசெம்பர் 24ஆம் திகதி குறித்த நபர் புதிய பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். மேலும் நாட்டை விட்டு வெளியேறும் அனுமதிச் சான்றிதழ் வழங்க பி.சி.ஆர் சோதனை அறிக்கை வரும் வரை காத்திருக்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டது. டிசெம்பர் 30ஆம் திகதி பெறப்பட்ட அறிக்கை குறித்த நபர் கொவிட்19 தொற்றுக்கு ஆளாகியிருப்பதை உறுதிப்படுத்தியது. எனவே அவரை மருத்துவமனையில் சேர்ப்பதற்காக பொதுச் சுகாதார அதிகாரிகள் அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் டிசெம்பர் 29ஆம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையமூடாக நாட்டை விட்டு வெளியேறியிருந்தமை தெரியவந்தது என்றார். (ப)

# கிழக்கில் நல்லிணக்கத்துக்கான கோரிக்கைகளுக்கு நிபுணர் குழு

திருமலை, ஜன. 5

கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான சமூக அநீதிகள் பற்றிய முறைப்பாடுகள், கோரிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகளைப் பொது மக்களிடமிருந்து பெற்று, அவற்றை ஆய்வு செய்து, பொருத்தமான பரிந்துரைகளை வழங்கவென நிபுணர்கள் குழுவொன்றை, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் நியமித்துள்ளார்.

இதன்படி, கடந்த நான்கு தசாப்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட எந்தவொரு பிரிவினைவாத நடவடிக்கை அல்லது முறையற்ற செயற்பாடுகள் அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான தனி நபர்கள் அல்லது குழு தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடிமென அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த வகையிலாவது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது தொடர்ச்சியாக பாதிப்புக்கு முகங்கொடுத்து வருபவர்கள் அது தொடர்பான உறுதிப் படுத்தப்பட்ட அதிகாரபூர்வ ஆவணங்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ப)

# யானை முத்துக்களுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜன.5

யானைத் தந்தங்களில் இருந்து பெறப்படும் 6 முத்துக்களை 15 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவர் காலி உணவட்டுன பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-இ)

# வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் களவு

யாழ்ப்பாணம்,ஜன.5

வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, இனம் தெரியாதவர்களால் திரு டப்பட்டுள்ளது.

இணுவில் கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றிலிருந்தே மோட்டார் சைக்கிள் திருடப்பட்டு ள்ளது.

வீட்டு முற்றத்தில் திறப்புடன் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணியாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)



கிளிநொச்சி வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 42 முதியவர்களுக்கு புதுவருடத்தை முன்னிட்டு புத்தாடைகள் மற்றும் விசேட உணவுகள் கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தால் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-ரி1)

# மாகாண தேர்தல் குறித்த தீர்மானங்கள் ஏதுமில்லை

## காணி விவகார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.5**

**மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசு தற்போது எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மாகாண சபைக்கு எதிரான போராட்டங்களை அரசுக்கு எதிரான போராட்டமாக மாற்றிவிட வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் அஞ்சாது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பல சிக்கல் நிலை காணப்படுகிறது.

ஆகவே அரசு மாகாண சபைத் தேர்தல் குறித்து எவ்வித தீர்மானங்களையும் இதுவரையில் எடுக்கவில்லை. மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக நிதி அவசியமாகும். ஆகவே நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற செலவுகளைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது - என்றார். (ப)

# சூதாட்ட விடுதி சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜன.5
வனாத்தவில்லு, மயிலன்குளம் பிரதேசத்தில் வீடொன்றில் இரகசியமான முறையில் இயங்கிவந்த சூதாட்ட விடுதியொன்று நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது.

சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் 7 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து பணம் மற்றும் சீட்டாட்ட அட்டைகள் சிலவும் கைப்பற்றப்பட்டன் என வனாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

*படைப்புழுவை ஆராய*

# இலங்கை வந்தது வல்லுநர் குழு

கொழும்பு, ஜன.5
ருவண்டா நாட்டைச் சேர்ந்த படைப்புழு தொடர்பான வல்லுநர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும், அவர்கள் படைப்புழு தொடர்பான தங்கள் கண்டுபிடிப்புகள் குறித்து இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் விவாதித்துள்ளனர் என்றும் இலங்கை இராணுவத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வட மத்திய மாகாணத்திலும் பிற இடங்களிலும் மக்காச்சோளப் பயிர்ச் செய்கையில் சேனா அந்துப்பூச்சி, கம்பளிப்பூச்சி போன்றவை பரவி பயிர்ச் செய்கையை நாசப்படுத்தி வருகின்றன. இந்தநிலையில் அவற்றை விஞ்ஞான நிபுணத்துவத்துடன் கட்டுப்படுத்தும் சாத்தியக் கூறுகளை ஆராயும் நோக்கில் ருவண்டாவிலிருந்து இந்த சிறப்புத் தூதுக்குழு இலங்கைக்கு வந்துள்ளது. இந்தக் குழுவில் ருவண்டாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டு நிபுணர்கள் அங்கம் வகிக்கின்றனர் என்று அந்த ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ப)

# மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த ஏற்பாடு

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.5
மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கிராம வீதி மற்றும் அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
மாகாண சபைத் திருத்தம் கொண்டு வரப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபையை நிர்வகிக்க முடியாது. மக்களின் பிரச்சினைகள் மக்கள் பிரதிநிதிகளிடமே தெரிவிக்கப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகள் இன்றி அதிகாரிகளால் மாத்திரம் அனைத்தையும் செய்ய முடியாது. அதிகாரிகள் மக்களுடன் இணைவது குறைவு. எனவே தான் மாகாண சபை தேர்தல் நாட்டுக்கு அவசியம். நாடாளுமன்றம் கூடும் போது, மாகாண சபைத் தேர்தல் முறை, திருத்தம், தேர்தல் முறையில் உள்ள குறைபாடு என்பவை குறித்துக் கலந்துரையாடி, இது தொடர்பாகக் குழுவொன்று நியமித்து மிக விரைவில் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது-என்றார். (ப)

# மரண வீட்டுக்கு வந்தவர் தொற்றுக்குள்ளாகி சாவு

கொழும்பு, ஜன.5
பலாங்கொட, கிவுலவெல பிரதேசத்தில் மரண வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இதன் காரணமாக 10 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பலாங்கொட சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். அவர் கடந்த 29ஆம் திகதி பலாங்கொடவில் இருந்து மரண வீட்டுக்குச் சென்று, அங்கிருந்து மீண்டும் இரத்தினபுரிக்குச் சென்றுள்ளார். கடந்த 30ஆம் திகதி அவர் தங்கியிருந்த விடுதியில் சிலருடன் விருந்து ஒன்றையும் நடத்தியுள்ளார். இதன்போது அவர் வழுக்கி விழுந்ததால் நரம்பு வெடித்து இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதென சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். அவரை மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம மருத்துவமனைக்கு மாற்றி அனுப்பிய பின்னர் கடந்த 2ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளார். (ப)



# புதிய ஆண்டில் கடமைகள் பொறுப்பேற்பு

கிளிநொச்சி,ஜன.5
கண்டாவளை பிரதேச செயலகத்தில் புதிய ஆண்டுக்கான கடமைகள் ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

தருமபுரம் சுகாதார மருத்துவ அதிகாரியால் கொவிட்19 தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-222)



# இந்தியாவுக்கு அடிபணிந்த அரசு

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.5
கொழும்புத் துறைமுகத்தின் இரண்டு பிரதான முனையங்களை அரசு இந்தியாவுக்கும், சீனாவுக்கும் 5 வருட காலத்துக்குள் தாரைவார்த்து விடும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அமைச்சரவை யோசனையை கப்பல் துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ளார். அமைச்சரவை யோசனையில் எவ்விதமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை பொறுப்பான அமைச்சர்கூட அறிந்திருக்கமாட்டார். அமைச்சரவை யோசனையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அரசால் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த முடியுமா என்ற சவாலை முன்வைக்கிறோம்.

கடந்த அரசு பிற நாட்டவர்களுக்கு விற்ற தேசிய வளங்களை ஆட்சிக்கு வந்த பிறகு மீளப் பெறுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேர்தல் காலத்தில் அரசியல் பிரசாரம் செய்தார். ஆனால் தற்போது அரசு இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது. தேசிய முதலீட்டாளர்களுக்கு கிழக்கு முனையத்தை வழங்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது - என்றார். (ப)

# ஜெனிவா விடயத்தை கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் இணக்கம்

## கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

வவுனியா, ஜன.5

**உறுப்பு நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பேரவை, அதன் ஆணையாளர் ஆகியோருக்குத் தெளிவான ஒரு செய்தியை வழங்க வேண்டியமை தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



ஜெனிவா விடயங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொறுப்புக் கூறல் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில் எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் அந்த விடயம் ஒரு பூச்சியத்தில் இருக்கும் நிலையில் எதிர்காலத்தில் எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாள்வது என்பது தொடர்பாகப் பேசியிருந்தோம்.

மனித உரிமைகள் விடயத்தில் பொறுப்புக்கூறல் தொடர்பாக கட்சிகள் மட்டத்தில் இருக்கக்கூடிய பலவீனத்தை முழுமையாக விளங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஒரு இணக்கப்பாடு வந்துள்ளது.

வடக்கு, கிழக்கைச் சார்ந்த தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புகள் ஒரு புள்ளியில் சந்திக்கக் கூடிய வகையில் உறுப்பு நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பேரவை, அதன் ஆணையாளர் ஆகியோருக்குத் தெளிவான ஒரு செய்தியை வழங்க வேண்டியமை தொடர்பாகவும் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பாக மேலதிக செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு நானும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிவில் சமூகப் பிரதிநிதிகளின் அமைப்பு, நாடாளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரனுடைய அமைப்பு உள்ளிட்ட ஒரு குழு இணைந்து ஒரு புள்ளி என்ற விடயத்தை எழுத்து மூலம் ஆவணப்படுத்துவதற்கு இணங்கியிருக்கிறோம். மிகவிரைவில் அது முன்னெடுக்கப்படும். அதனை ஒரு ஆரம்பமாக வைத்து அடுத்தகட்டச் சந்திப்புகளை மேற்கொள்வதற்கு நாம் இணங்கியிருக்கிறோம் - என்றார். (ப-110)

# தனித்திருந்த பெண்ணின் சங்கிலி அறுப்பு

வவுனியா, ஜன. 5

தமது வியாபார நிலையத்தில் தனித்திருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

வவுனியா சாந்தசோலையில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தும் பெண்ணினுடைய சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத் இரு நபர்கள் அவரது வியாபார நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்வதுபோல் பாசாங்கு செய்து, அவர் அணிந்திருந்த இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-110)

# சங்குப்பிட்டி பாலத்தில் ‘செல்பி’ விபத்துக்கள் இடம்பெற வாய்ப்பு

## சாரதிகள் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியிலுள்ள சங்குபிட்டிப் பாலத்தை பார்வையிட வருபவர்களில் சிலர் பாலத்தின் நடுப்பகுதியில் நின்று தம்மையும் மறந்து "செல்பி" எடுப்பதால், அப்பாலத்தினூடாகப் பயணம் செய்யும் வாகனங்களில் மோதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று வாகனங்களின் சாரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையூடாக மன்னாருக்கும், கிளிநொச்சியூடாக தென் பகுதி வரைக்கும் வாகனங்கள் பயணம் மேற்கொள்ளும் பிரதான பாதையாக இப்பாதையுள்ளது. பெரும்பாலான கனரக வாகனங்கள் இப்பாதையூடாகவே யாழ்ப்பாணத்துக்கு வருகின்றன. சங்குப்பிட்டிப் பாலத்தைப் பார்வையிட வருவோரில் சிலர் தம்மையும் மறந்து பாலத்தின் நடுவில் நின்று "செல்பி" எடுக்கின்றனர். வாகனங்கள் பயணிப்பதையும் அவதானிக்காது பாலத்தின் நடுவில் நிற்கின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (ஐ-ரி1)



# ஐயப்ப பக்தர்கள் பாதயாத்திரை!

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐயப்ப பக்தர்கள் சிலர் நேற்று கொக்கிளாயிலிருந்து முள்ளியவளை வரையான பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்தனர்.

வருடம் தோறும் குறித்த காலப்பகுதியில் ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதமிருந்து இந்தியாவிலுள்ள சபரிமலைக்குச் சென்று அங்கு வழிபட்டு வருவது வழமை. எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சபரிமலைக்குச் செல்ல முடியாத நிலையில், அதே தூரத்தை பாதயாத்திரை மூலம் கடக்கும் நோக்கிலேயே அவர்கள் இவ்வாறு பாதயாத்திரையை முன்னெடுத்தனர்.

பக்தர்கள் கொக்கிளாயிலிருந்து கொக்கிளாய் முல்லைத்தீவு பிரதான வீதி வழியாக, முள்ளியவளைப் பகுதி நோக்கிச் சென்று நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் தங்களுடைய வழிபாடுகளை மேற்கொண்டு, ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்று யாத்திரையை நிறைவு செய்யவுள்ளனர். இந்தப் பாத யாத்திரை தொடர்பில் காணொலி மூலம் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் தடுத்தனர் என்றும், அதையும் மீறி ஊடகவியலாளர்கள் செய்தி சேகரித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-19)

# மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

முல்லைத்தீவு,ஜன.5

முல்லைத்தீவு மாவட்டத்தின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கில் க. பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

சுகாதார நடைமுறைகளைப் பேணி நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், நட்டாங்கண்டல் மகா வித்தியாலயம்,வன்னிவிளாங்குளம் பாடசாலை, வவுனிக்குளம் பாடசாலை போன்றவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.(ஐ-ரி1)

# உடன்படிக்கை மீறப்பட்டதால் சு.க கலக்கமடைந்துள்ளதாம்

## அதன் மூத்த உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தேர்தலுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறப்படுவதன் காரணமாக தமது கட்சி கலக்கமடைந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கும் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், எமது கட்சி கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிடும் என்று ரோஹண லக் ஸ்மன் பியதாஸ மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# தலையில் படுகாயத்துடன் ஒருவர் மருத்துவமனையில்

தலையில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அந்தப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வரும் 55 வயதுடைய செல்வராஜா என்பவரே படுகாயமடைந்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடு[illegible] வருகின்றனர். (ப-ரி1)

# நூலகங்களை இயக்குவது தொடர்பில் கலந்துரையாடல்

வன்னேரிக்குளம்.ஜன.5


கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள நூலகங்களை இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வன்னேரிக்குளத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் வன்னேரிக்குளம் வட்டார உறுப்பினர் நா.செல்வநாயகம், அக்கராயன் வட்டார உறுப்பினர் சு.தயாபரன், அக்கராயன் கிராம அலுவலர் ப.சபாரத்தினம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வன்னேரிக்குளம் நூலகத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொண்டு,தை பூசத்தில் நூலகத்தை இயக்குவது என முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை ஆனைவிழுந்தான் கிராமத்தில் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நூலகத்[illegible] இயக்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. (ஐ-ரி2)

# தமிழ் மக்களினது உரிமைக்காக உழைத்தவர் குமார் பொன்னம்பலம்



என்.குமரகுருபரன்

**மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 21ஆவது நினைவுதினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

அண்ணல் குமார் பொன்னம்பலம் என்னும் உரிமைக்குரல் எம்மிடமிருந்து பறிக்கப்படாமல் இருந்திருந்தால் இன்று ஏகப்பட்ட நன்மைகளை தமிழ்ச் சமூகம் சந்தித்திருக்கும். இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நலன்களில் அவருக்கிருந்த அர்ப்பணிப்பு முக்கியத்துவம் கொண்டதாக விளங்கியது. அரசியல் காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சார்பில் நீதிமன்றங்களில் வாதாடினார். உலகு எங்கணும் எவ்விடத்திலும், தமிழ் மக்களுக்குச் சார்பான கருத்துக்களைத் துணிவாக வெளியிட்டு வந்தார். தமிழர்களின் அபிலாஷைகளை நோக்கிய பயணத்தின் காரணமாக, அவரை அழித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டனர் கயவர்கள். இதையடுத்து இனந்தெரியாதவர்களால் மாமனிதர் குமார் பொன்னம்பலம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது 21ஆவது நினைவுதின மான இன்று குமார் பொன்னம்பலத்தின் வாழ்வை - அவரின் ஆளுமையை - அரும்பெரும் பணிகளை மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழர் தம் அடிப்படை அபிலாசைகளை இடித்து வலியுறுத்தியவர் குமார் பொன்னம்பலம். இதனை legitimate Aspirations என்றே உரைப்பார். தமிழ் இயக்கங்கள் ஒன்றுபட்டு ஏற்றுக்கொண்ட திம்புக்கோட்பாடு களையே தமிழர் தம் அடிப்படை அபிலாசைகளாக வலியுறுத்திக் கொண்டிருந்தார். எந்த ஒரு சிங்களத் தலைமையும் வடக்கு கிழக்கு எனும் தமிழர் தம் பூர்வீக நிலத்தையும், பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்வார்களானால் அரசியல் தீர்வைத்தர வல்லவர்களாவர், அன்றேல் இல்லை என்பது அவர்தம் நம்பிக்கை. ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான சகவாழ்வு சாத்தியப்படுமென நம்பினார். அதுவே அவர் அடிப்படை அபிலாசைகளை வலியுறுத்தக் காரணமானது.

**சிறிமாவோவுடனான நட்புறவு**

இதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் பார்ப்போமானால், இந்திய ஈடுபாடு குறித்த [illegible] அவரது நிலைப்பாடானது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் என்போரின் நிலைப்பாடுகளுக்கு நெருங்கியதாக நகர்ந்தது. அபிலாசைகளை அடியொற்றிய DPA Manifesto எனும் அரசியல் உடன்பாடு ஊடாக 1988ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவை ஆதரிப்பதற்காக வடக்கின் இடதுசாரிக் கம்யூனிஸ்ட்கள் ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் இணைந்தபோது குமார் பெறுமதிமிக்க பங்களிப்பை ஆற்றினார். அது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவுடனான நட்புறவுக்குக் காரணமாயிற்று. சம்பிக்க ரணவக்கவும் பல்கலைகழக



மாணவர் அமைப்பின் சார்பாக இதில் கையொப்பமிட்டிருந்தார். அவரிடம் அரசியல் நேர்மையும் இருந்தது.

கடைசி வருடங்களின்போது குமார் பொன்னம்பலம் ஆற்றிய பங்களிப்பை நினைவூட்டுவது சிலருக்கப் பிடிக்காது. அவரது கடைசி வருடங்களின்போது அவர் காட்டிய மன வலிமையானது அதீதமானது. தலைவர் குமாரின் அரசியல் நிலைப்பாடானது ஏறுமாறானதாகவோ சந்தர்ப்பவாதப் போக்குடையதாகவோ, இருக்கவில்லை. ஆனால் கொள்கை நிலையை, தமிழர் தம் அபிலாசைகளை வலியுறுத்துவதாகவே இருந்தது. அவரது முயற்சிகள் குறித்த நம்பிக்கையின் தோல்வியானது. குமாரின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வழிகோலிற்று. தமது அரசியல் இலட்சியங்களை எப்போதோ கைவிட்டுவிட்டு, இந்திய அரசாங்கத்துடன் இல்லையென்றாலும் இலங்கை அரசாங்கத்துடன் தொங்கிக்கொண்டிருக்கும் சிறு துண்டுகளாக மாறிய தமிழ் விடுதலை இயக்கங்களின் தலைவர்களின் நடத்தையின்பால் கவலை அவர் கொண்டிருந்தார்.

**அனைவரையும் ஒருங்கிணைக்க இறுவரை உழைத்தவர் குமார்**

அவரிடமிருந்து கைக்கொள்ள வேண்டிய ஒரு பண்பு, 'கருத்து வேற்றுமைகள் என்பது வேறு, மனித அன்பும், மனித பண்பும் என்பது வேறு' இறுதிக்காலம் வரை அனைத்து இயக்கங்களையும் வரவேற்று தனது இல்லத்தில் விருந் தோம்பி ஒன்றுபடுத்தி பொதுக்கருத்துக்காகச் சந்திப்புக்களை ஏற்படுத்தினார். இதன் விளைவுதான், பின்னாளில் பத்துப்பதினோரு கட்சிகளின் கூட்டமைப்பாக நாம் ஒன்றுபட்டு செயற்பட, போராட்டம் நடத்த வழிவகுத்தது. அதே வேளை தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குச் சார்பாக நின்ற ஒரேயொரு உண்மையான சக்தி விடுதலைப் புலிகள் அமைப்பு என அவருக்குத் தென்பட்டது.

பிரச்சினைக்கு நீதியானதும் நிலையானதுமான ஒரு தீர்வைக் காண்பது தொடர்பில் உள்ளொன்றும் புறமொன்றுமாக விளங்கும் குறுகிய எண்ணங்கள் கொண்ட நாட்டுப் பற்றைவலியுறுத்தும் சக்திகளும், தேசிய அரசியல் கட்சிகளும் தன் சுயநிர்ணயக் கோரிக்கைக்குப் பெரும் பாதகம் ஏற்படுத்தின என்று அவர் அடிக்கடி தெரிவிப்பார்.

குமார் வாழ்ந்த காலம் மிகமிக கடினமான காலமாகும். இதுவரை ஆயுதம் ஏந்தாத எந்தவொரு தமிழ் அரசியல் வாதியைவிட அதிக பிரச்சினைக்கு தனது எதிர்நீச்சலை, ஆபத்தை ஏற்றுக்கொண்ட அவர், அவரது எந்தவொரு நாடாளுமன்ற அரசியல் எதிரியைவிடவும் நேர்மையாக அதிகமாகச் சாதித்தார்.

கனேடிய தமிழர் அவரை தமிழர் தம் உண்மைத் தலைவராக மனமார ஏற்று செங்கம்பளமிட்டு வரவேற்றப்பளித்தனர். அவர் மறைவில் தபால் தலைப்பும் வெளியிட்டனர். அத்துணை தலைவர் இன்றில்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு. சர்வதேச அரங்கின் உயர் ஸ்தானங்களோடு தூதரகங்களோடு ஒரு மதிப்பிற்குரிய பிரமுகராக உறவை வளர்த்துக்கொண்டிருந்தார். சில்லறை அரசியல் வாதிகளைப்போலன்றி சர்வதேச உறவுகளையும், இவரை அவர்கள் நாடவேண்டிய தேவையையும் முற்றிலும் தமிழினத்திற்காகவே ஏற்றப்படுத்தி செயற்பட்டார் என்பதை அவரின் மறைவின் பின்னான ஐ.நா உள்ளிட்ட சர்வதேசத்தாரது பதிவுகளும் பாராட்டுகளும் துயர்பகிர்வுப் பதிவுகளும் எடுத்தியம்புகின்றன.

இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நலன்களில் அவருக்கிருந்த அர்ப்பணிப்பு முக்கியத்துவம் கொண்ட தாக விளங்கியது. அரசியல் காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சார்பில் நீதி மன்றங்க ளில் வாதாடினார். உலகு எங்கணும் எவ்விடத்திலும், தமிழ் மக்களுக்குச் சார்பான கருத்துக்களைத் துணிவாக வெளியிட்டு வந்தார். தமிழர்களின் அபிலாஷைகளை நோக்கிய பயணத்தின் காரணமாக, அவரை அழித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டனர் கயவர்கள்.


# இலங்கை எந்த நாட்டிடமும் இறைமையை கையளிக்காது!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் உறுதி!



**கொழும்பு, ஜன.5**
**இலங்கை சீனாவிடம் சரணடையவில்லை என்று வெளி விவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

இலங்கை சீனாவின் செல்வாக்குக்கு எதிராக தனது இறைமையை நிலைநாட்டினால் மாத்திரமே நிதி உதவி வழங்கப் படும் என அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளமை குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
இலங்கை எந்த நாட்டிடமும் தனது இறைமையைக் கையளிக்கப் போவதில்லை. நாங்கள் எங்கள் இறைமை குறித்து அவதானமாக இருக்கின்றோம். இது குறித்து எந்த நாடும் விசேடமாக தெரிவிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் எங்களுக்கு இந்த நாட்டின் இறைமையைக் கையளிக்கும் எண்ணமில்லை. அமெரிக்காவின் நிபந்தனைகள் குறித்து கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் உரிய முறையில் ஆராயா மல் எதனையும் தெரிவிக்க முடியாது. உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பும் எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை -என்றார். (ற-இ)



# நம்பிக்கையற்ற புதிய வருடம்

## பாலித கவலை

கொழும்பு, ஜன.5
மனிதர்களின் வாழ்க்கைக்கு நம்பிக்கையில்லாத ஆண்டாக புதிய ஆண்டு அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாலித தேவரப்பெரும தெரிவித்துள்ளார்.
களுத்துறையில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. கொரோனா வைரஸை அரசாங்கத்தால் இதுவரை கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது. தினமும் 500 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், தினமும் சுமார் 5 பேர் உயிரிழந்து வருகின்றனர். பிறந்துள்ள 2021 ஆம் ஆண்டு மிகவும் நிச்சயமற்ற ஆண்டு. நாட்டின் பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வு அரசாங்கத்திடம் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

கொரோனா அச்சத்தால்

## ஓட்ட மாவடியில் வீதியோர கடைகள் 3 நாள்களுக்கு பூட்டு

மட்டக்களப்பு, ஜன. 5
ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் பிரதான வீதியை அண்மித்த அனைத்து வியாபார நிலையங்களையும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு மூடுமாறு சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.
ஓட்டமாவடி பொதுச் சந்தையை அண்மித்துள்ள மரக்கறி வியாபாரிகள் மாத்திரம் இன்று செவ்வாய்க்கிழமை 2மணி வரை வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
குறிப்பாக ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் தனிமைப்படுத்தல் நிலையில் உள்ள வீதிகள் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.
இப் பிரதேச செயலர் பிரிவில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். அதனால் மக்களின் பாதுகாப்புக்கருதிய அவசர ஒன்றுகூடல் ஓட்டமாவடி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. (த)

# நதிப் பாதுகாப்பு திட்டம் பெப்ரவரி 2 இல் ஆரம்பம்

கொழும்பு, ஜன.5
நதி பாதுகாப்பு செயற்றிட்டம் எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும். இதன்கீழ் 103 நதிகள் அபிவிருத்தி செய்யப்படும் என சுற்றாடற்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். சுற்றுலாத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இந்தத் திட்டத்துக்கு 200 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடக நதிகளின் விளிம்புப் பகுதிகளில் உள்ள சட்டவிரோத கட்டடங்கள் இந்த செயற்திட்டத்தின் ஊடாக அகற்றப்படும். ஆற்றுப்படுகையில் உள்ள மண் வளத்தைப் பாதுகாக்க பலமான மரங்கள் கரையோரங்களில் வளர்க்கப்படும். சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகளைத் தவிர்க்க 24 மணித்தியால கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)


# முதலாம் தரத்துக்கு பெப்ரவரியில் அனுமதி

கொழும்பு, ஜன.5
தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள்தவிர ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அடுத்த மாதமே தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.
இந்தப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

## கொதிகலன் வெடிப்பு; இந்திய பிரஜை சாவு

கொழும்பு, ஜன. 5
தொழிற்சாலை ஒன்றில் கொதிகலன் வெடித்த சம்பவத்தில் இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்தார் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார். கம்பஹா - கொட்டதெனியாவ பகுதியிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் மேலும் இரு வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

# ரயில் சேவைகள் ஆரம்பம்



அனைத்து ரயில் சேவைகளையும் நேற்று முதல் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதற்கமைய பிரதான மார்க்கத்தில் 64 ரயில் சேவைகளையும், கரையோர மார்க்கத்தில் 74 ரயில் சேவைகளையும், களனி வெளி மார்க்கத்தில் 12 ரயில் சேவைகளையும் வடக்கு ரயில் மார்க்கத்தில் 6 ரயில் சேவைகளையும் புத்தளம் ரயில் மார்க்கத்தில் 26 ரயில் சேவைகளையும் நேற்று முதல் ஆரம்பித்து இந்த வாரம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஜனவரி 22 முதல் வணிக விமானங்கள் அனைத்தும் இயங்கும்



கொழும்பு, ஜன.5
வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்காக ஜனவரி 22 ஆம் திகதி முதல் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அவதானம் செலுத்தி, சுகாதாரப் பிரிவுகளின் விசேட கண்காணிப்பின் கீழ் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஜனவரி 22 ஆம் திகதியின் பின்னர் நாட்டுக்கு வருவதற்கு அனைத்து வர்த்தக விமானங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து நாட்டை திறக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** பெண்கள் சவாலான செயல்கள் செய்து பெருமிதம் அடைவீர்கள். மனப்போராட்டங்கள் ஓயும். தடைப்பட்ட வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். கடினமாக உழைத்தே எதையும் சாதிக்க வேண்டிவரும். தொடர்பற்ற பழைய நண்பர்கள் மீண்டும் இணைவார்கள்.

**மிதுனம்:** பகைத்த சொந்தபந்தங்கள் உங்களைத் தேடி வருவார்கள். பல காலம் திட்டமிட்டபடி புதிதாக வாகனம் வாங்குவீர்கள். வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் குறையும்.

**கடகம்:** சேமிப்புக் கூடும். வியாபாரத்தில் புதியவர்களின் அறிமுகம் ஏற்படும் . உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** உங்களை எதிர்ப்போரிடமும் கூடக் கனிவாக பேசி நல்ல பெயர் எடுப்பீர்கள். உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நன்மை அளிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** பொதுநல விஷயங்களில் ஈடுபடுவீர்கள். உங்களின் பண வரவு உயரும். அலுவலகத்தில் எதிர்பாராத நபருடைய சந்திப்பு நிகழும் நாள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்..

**துலாம்:** பிறருடன் வீண்விவாதங்களை தவிர்த்து நிம்மதி காண்பீர்கள். உறவினரால் ஏற்பட்டிருந்த பிரச்னை நீங்கும். நிம்மதி ஏற்படும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** சிலருக்கு மனதில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும். தாயாரின் உடல்நலன் நன்றாக இருக்கும். சேமிப்பு கூடும். தொடங்கும் முயற்சி இழுபறியானாலும் அனுகூலமாக முடியும்..

**தனுசு** பிள்ளைகளுடன் அதிகக் கண்டிப்பின்றி நடந்து கொள்ள முயலுங்கள். வாழ்க்கைத் துணையால் வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாகும். முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்** அன்றாட விஷயங்கள் மாறுதலின்றி நடைபெறும் நாள். உங்களின் கடின உழைப்பால் எதிர்பார்த்ததை விட வரவு கூடும். வாழ்க்கைத்துணையின் முயற்சியால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிலும் கவனமாயிருங்கள். யாரையும் அதிகம் நம்ப வேண்டாம். அலுவலகத்தில் அவசரப்படாமல் செயற்படுங்கள். நண்பர்கள் உதவுவர். புதிய முதலீடுகள் வேண்டாம்.

**மீனம்:** சகோதரர்களால் நன்மையும், சங்கடமும் ஏற்படக்கூடும். குடும்பத்தினர் இடையே முன்பு இருந்ததை விட ஒற்றுமை கூடும். பிறர் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்கள்

# சில பகுதிகளுக்கு தனிமை நீக்கம்

கொழும்பு, ஜன.5

நாட்டின் சில இடங்கள் நேற்று அதிகாலையுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட் டுள்ளதுடன், மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தின் மோதர (முகத்துவாரம்) பொலிஸ் பிரிவு, வாழைத் தோட்டப் பொலிஸ் பிரிவில் அளுத்கம மேற்கு, அளுத்கம கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பொரளை பொலிஸ் பிரிவில் வனாத்தமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு, மிரிஹானை பொலிஸ் பிரிவில் தெமலவத்த ஆகியவையும் கம்பஹா மாவட்டத்தில் பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேலியகொட, மீகஹவத்த, பட்டிய வடக்கு, பேலியகொட கங்கபட கிரிபத்கொட பொலிஸ் பிரிவில் விலேகொட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பவை நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கண்டி - பூஜாபிட்டி பிரதேச செயலாளர் பிரி வுக்கு உட்பட்ட கொஸ்கோட்டை கொலனிக்கு பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் 31 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சந்தையில் சிரமதானம்

வவுனியா, ஜன.5

வவுனியா மரக்கறி மொத்த வியாபார சந்தையில் சிரமதானப்பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் நகர சபை பொது சுகாதாரப் பரிசோதகர் க.இலங்கேஸ்வரனின் மேற்பார்வையில் குறித்த சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. (ரி5-110)



## மட்டக்களப்பு

# பெரும்போக அறுவடையை அரசு கொள்வனவு செய்யும்!

கொழும்பு, ஜன.5

மட்டக்களப்பில் பெரும்போகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரச நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கிறது.



முதற்கட்டத்தில் 18 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய முடியும் எனவும் எதிர்வரும் 10ஆம் திகதி இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர் ஏ.ஜீ. நிமால் எக்கநாயக்க தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 919 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் இரண்டு லட்சத்து 44 ஆயிரத்து 886 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# சுகாதாரத் துறையினர் மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

### முன்னாள் எம்.பி நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.5



அரசாங்கத்தின் தவறான முடிவுகளால் உள்ளூர் சுகாதாரத் துறை மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளது என ஜேவிபியின் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிராக விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளுக்குப் பதிலாக புராணக்கதைகளை நம்புவது பெரும் தவறு. அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தபடி மக்கள் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியதால் முதலாவது அலை கட்டுப்படுத்தப்பட்டது.

2ஆவது அலையின் போது சுகாதார அமைப்பின் மீது நம்பிக்கை குறைவடைந்ததால் மக்கள் அவர்கள் தெரிவிப்பதை செவிமடுக்கத் தவறிவிட்டனர். சுகாதார அமைச்சரும் இராஜாங்க அமைச்சர் மற்றும் சபாநாயகர் தேவையற்ற ஊக்குவிப்புகளை முன்னெடுத்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



# நுவரெலியாவில் கிராமிய நூலகம்

நுவரெலியா, ஜன.5

சிறகுகள் அமையத்தின் படிப்பகம் செயற்றிட்டம் ஊடாக 9 ஆவது கிராமிய நூலகம், நுவரெலியா ஹைபொரஸ்ட் கிராமத்தில் புத்தாண்டு தினத்தன்று திறக்கப்பட்டது.

இந்த நூலகத்துக்கு "செந்தமிழ்" நூலகம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. நூலக உருவாக்கப் பணிகளை ஹைபொரஸ்ட் இளைஞர் அமைப்பினரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

சுகாதார முன்னேற்பாடு களோடு இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நூலகம் எதிர்காலத்தில் கல்வி ரீதியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்த நூலகத்துக்கான நூல்கள் சிறகுகள் புத்தக சேகரிப்பினூடாக பெறப்பட்டவையாகும். (ற-இ)

# ஜனவரி மாத ராசிபலன்கள்







அனுபவத்தையும், திறமையையும் கொண்டு காரியங்களைத் திறம்படச் செய்யும் மிதுன ராசியினரே!

நீங்கள் எந்தச் சூழ்நிலையிலும் விவேகத்தை கை விடாதவர்கள். இந்த மாதம் கடிதப் போக்குவரத்து சாதகமான பலன் தரும். அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்குக் காணப்படும். தடைபட்டிருந்த கல்வியை தொடர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுர்யமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமானதாக்கிக் கொள்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்வது நன்மை தரும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணியிட மாற்றம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடமும் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் சாதகமான பலன்கள் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும்.

**பெண்களுக்கு** மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. வீண் வாக்குவாதத்தை விட்டு நிதானமாக பேசுவது நன்மைகளைத் தரும்.

**கலைத்துறையினருக்கு** மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன்கள் தரும். பணவரவு அதிகரிக்கும். புத்தி சாதுர்யத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

அரசியல் துறையினருக்கு வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. சொல்வதைக் கேட்டு நீங்கள் நடக்கவில்லையே என்ற எண்ணம் மேலிடத்துக்கு ஏற்பட்டு நீங்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். எதிர்பார்ப்புகளைக் குறைத்து, இருப்பதை வைத்து முன்னேற முயற்சிப்பது நல்லது.

### மிருகசிரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள்:

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மைகள் ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன் மதிப்பைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளைச் செய்து மேல் அதிகாரிகளிடம் பாராட்டுகள் கிடைக்கப் பெறுவார்கள்.

### திருவாதிரை:

இந்த மாதம் உயர்பதவிகளும் கிடைக்கக் கூடும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். எல்லா வகையிலும் நன்மைகள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்.

பிள்ளைகள் நீங்கள் கூறியதைக் கேட்டு அதன்படி நடப்பது ஆறுதலைத் தரும். தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக முடியும். பணவரத்து அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கி முன்னேற்றம் காண்பர். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பாராட்டும் கிடைக்கும்.

### புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்:

இந்த மாதம் எல்லாப் பிரச்சினைகளும் சுமுகமாக முடியும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். வீண் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல்படுவது நன்மைகளைத் தரும். பணவரத்து தாமதப்படும்.

பெரியோர்களிடம் பகைமை பாராட்டுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் தாமதப்படும். பழைய பாக்கிகள் வசூலாவதில் மெத்தனம் காணப்படும். எந்தவொரு வேலையையும் அலைச்சலோடுதான் செய்து முடிக்க வேண்டி இருக்கும்.

## கனமழையால் நீரில் மூழ்கின தாழ்நிலங்கள்!

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்துவரும் இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அந்தவகையில் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட நொச்சிமுனை, நாவற்குடா, வேலூர், கூழாவடி, மாமாங்கம், குமாரபுரம், புன்னைச்சோலை, இருதயபுரம், கறுவப்பங்கேணி, பாரதி வீதி, எல்லை வீதி உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் இப்பகுதிகளில் வாழ்ந்தோரில் பலர் வேறு பகுதிகளில் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேநேரம் படுவான்கரையின் பல பகுதிகளில் வெள்ள அபாயம் காணப்படுகிறது என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று, கிரான் பிரதேச செயலகப்பரிவுகளிலும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலையில் உள்ளன. (ற-இ)

## 5,000 வீடுகள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஜன.5

சௌபாக்கிய தொலைநோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கான 5 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இதன் முதற்கட்டமாக 3 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் இன்று உறுகொடவத்தைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதல் கட்டத்தின் கீழ் இந்த வீட்டுத்திட்டம் கொழும்பு மாவட்டத்தின் உறுகொடவத்தை, புளூ மெண்டல், மாலம்பே, மாகும்புர, பொரலெஸ்கமுவ ஆகிய பிர தேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. (ற-இ)

## பெண்ணின் சடலம் கடற்கரையில் மீட்பு

கொழும்பு, ஜன.5

ஹிக்கடுவ பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கடற்கரையில் மிதந்து கொண்டிருந்த நிலையில், பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஹிக்கடுவ களுப்பே பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது சடலம் பிரேத பரி சோதனைக்காக கராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## ஒரு சூலில் இரு கன்றுகள்

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு ஆயித்தியமலை கிராமத்தில் பசுவொன்று ஒரே சூலில் இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது. ஆயித்தியமலை மணிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் சுதர்ஷினி என்பவர் வளர்த்து வரும் பசுவே இவ்வாறு இரு கன்றுகளை கன்றுகளை ஈன்றுள்ளது. புதுவருட தினத்தில் நிகழ்ந்த இந்த அரிதான நிகழ்வை கிராம மக்களும் மாடு வளர்ப்பாளர்களும் பார்வையிட்டு வருகின்றனர். (வ-இ)



# 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு. நடராஜா சந்திரராஜா (போஸ்)**

(முன்னாள் உரிமையாளர் குகன் ஸ்ரோர்ஸ் - தலவாக்கலை)

பிறப்பு 20.02.1948

இறப்பு 19.12.1989

அன்பான அப்பாவே ஆலமரமாய் நின்று எங்களை காத்து பாதி வாழியில் பிரிந்து சென்றீர்கள் இருந்தாலும் தங்களின் நிழலில் நின்று 31 ஆண்டு கடந்தோடின மேலும் உங்களின் வழிகாட்டல் எங்களை வழிநடத்தும் தங்களின் ஆத்மா சாந்தியடைய அற்புத நர்த்தன விநாயகர் பாதம் பணிகின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

என்றும் தங்களின் நினைவில் வாழும்
குடும்பத்தினர்


# ரட்ணாஸ் வைண்டிங் வேக்ஸ் வேண்டுகோள்

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களே தங்களால் எமக்கு வழங்கப்பட்ட திருத்த வேலைகளுக்காக எமக்கு தரப்பட்ட உபகரணங்களை தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒரு வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
அதற்கு பிறகு வரும் பொறுப்புக்களுக்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை என்பதனை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தொடர்பு: 021 222 5334

இல.219, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 11 . 1929

இறப்பு 31 . 12 . 2020

**திரு. குமாரசாமி பரராசசிங்கம் (செல்வம்)**

வட- கிழக்கு மாகாணங்களுக்கான ஓய்வுபெற்ற வேலைப் பரிசோதகர்
Inspector of Works – Kachcheri (district secretariat), Jaffna
நெடுந்தீவு (பிறந்த இடம்), உடுவில், கனடா

யாழ். நெடுந்தீவு மத்தி காரைவளவைப் பிறப்பிடமாகவும், உடுவில், கனடா (Scarbrough) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பரராசசிங்கம் அவர்கள் 31-12-2020 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி நாகமுத்து இணையரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் இராசம்மா இணையரின் மூத்த மருமகனும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வள்ளியம்மைப் பிள்ளை (இரத்தினாம்பிகை, ஓய்வுபெற்ற ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், குலராசசிங்கம் (கனடா), தயாநிதி (கனடா), டிலிபராசசிங்கம் (இங்கிலாந்து), அகிலராசசிங்கம் (கனடா), யமுனாநிதி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணநாயகம் (இலங்கை), சொர்ணம்மா (இலங்கை), புண்ணியமூர்த்தி (இலங்கை), கமலாம்பிகை (பூவதி- இங்கிலாந்து), லிங்கநாயகம் (பாலு- இலங்கை), கோபாலகிருஷ்ணன் (அன்னம்- இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலெச்சுமி (இலங்கை), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா, தயாவதி (இலங்கை), மருதையனார் (இங்கிலாந்து), மங்கையற்கரசி (இலங்கை), சகுந்தலாதேவி (தவம்- இங்கிலாந்து), காலஞ்சென்ற இரத்தினவடிவேலு, பசுபதி (செல்வம்- பிரான்ஸ்), கமலாம்பிகை (இராசாத்தி - இலங்கை), நித்தியானந்தன் (இராசன்- கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தி (கனடா), இரவீந்திரன் (கனடா), சுகன்யா (இங்கிலாந்து), சீவமதி (கனடா), செல்வகுமரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாணு, சஙணுகா, தமிழருவி, ஈழமகள், புலிமகள், சோபினி, ஆரணி, மகிரன், வருணிகா, கௌதமன், சஞ்சீவன், நிவாஷினி, வர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு:** 05 Jan 2021 7:00 PM – 10:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**நேரடி ஒளிபரப்பு:** 06 Jan 2021 5:00 PM

**கிரியை:** 06 Jan 2021 5:00 PM – 6:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre,
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

# தேவை

**மருந்தக அனுமதிப்பத்திரம் (Pharmacy License) உடனடியாக தேவை.**

தொடர்பு இலக்கம்:
077 470 1673, 077 777 1827

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 10 . 1934

மறைவு 07 . 01 . 2010

அமரர்

**பொன்னையா குமாரசாமி**

திதி: அபரபக்க ஸப்தமி

பத்து ஆண்டுகள் பறந்தோடிப் போனதுவே
நித்தம் உங்கள் நினைவுடனே நாமிங்கே
குடும்பத்தின் தலைவனாய் நிறைவாக வாழ்ந்தவரே
உங்கள் ஆத்ம சாந்திக்காய் அனுதினமும்
வேண்டுகின்றறோம்.

"பத்மகிரி"
கைதடி வடக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 . 06 . 1929

மறைவு 05 . 01 . 2013

**அமரர் வைத்தி கணபதிப்பிள்ளை**

எழுதும் வரியாவும் இவ்வாண்டு - உமது
எட்டாம் ஆண்டென்று நினைவுபடுத்துகிறது
ஐயா!
காலம் கடந்தாலும் கடக்க முடியவில்லை
உங்கள் நினைவுகளை - ஐயா!

உங்கள் வழிகொண்டு
உலகை அறிந்தோம் - இன்று
எம் கண்வழி கண்ணீராய்
உமை உணர்கின்றோம் - ஐயா!

குடும்பத்தின் தளைச்சுடரே !
நீர் அணைந்து இந்த குடும்பத்தை
இருள் மயமாக்கிவிட்டீரே !
உங்கள் அன்பொளிக்கு - நிகர்
இங்கு எவ்வொளியும் இல்லை - ஐயா!

இன்றும் அல்ல என்றும்
நீர் இல்லாத்துயர் - மனதை
சூழ்ந்து கொண்டுதான் இருக்கும் - ஐயா!

இன்று உங்கள் உடல் பிரிந்து சென்றாலும்
உங்கள் ஆசீர்வாதம் எம்முடன் இருக்குமென
மனச்சாந்தி கொண்டு உங்கள் பாதத்திற்கு
மலர்ச் சாந்தி செலுத்துகின்றோம் - ஐயா !

குடும்பத்தினர்

அரசியல் கைதிகள் விடுதலையை

## 28 தமிழ் எம்.பிக்களும் இணைந்து கேளுங்கள்

*தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் 'ஐடியா'*

யாழ்ப்பாணம், ஜன. 5

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் 28 பேரும் இணைந்து, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கைவிடுக்க முடியுமானால் ஒருவேளை அது வெற்றியளிக்கக்கூடும். அதற்கு உரித்தான கணிப்பைக் கருத்தில் கொண்டவராக, அவர் அதனை பரிசீலிக்கவேண்டியிருக்கும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு மாவட்டம் சார்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மொத்தம் 28 பேர் பல்வேறு கட்சிகளின் சார்பில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இயல்பாகவே அக்கறை கொண்டுள்ளனர். அரசியல் முரண்பாடுகளின் மத்தியிலும் இந்த நிலைமை காணப்படுவதால் பொது வேண்டுகோள் தொடர்பில் இவர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பது சாத்தியமானது.

ஆயினும், தமிழ் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரச தரப்பில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுவரும் நிலையில் நீண்ட பல வருடங்களாக சிறையில் வாடும் இந்தத் தமிழர்களின், விவகாரத்தை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் என்ற அடிப்படையில், இனியாவது அணுகுவது, காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

எனவே இந்த நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கும் விதத்தில், தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் 'குரலற்றோர் அமைப்பு ' செயலில் இறங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (கு)

# சாரதிகள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு சாரதிகள் உடன் தேவை. (Ten Wheel)

தொடர்பு: 077 772 2305

# சாரதி தேவை

யாழ் - கொழும்பு சேவையில் அனுபவம் வாய்ந்த சாரதி தேவை

077 780 6574

# வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் **கடைகள்** வாடகைக்குண்டு.

077 780 6574

# நாஹறா மருத்துவ நிலையம்

கை, கால் எலும்புகள் அதிகளவு பாதிப்படைந்த வாதம், மூட்டுவாதம், மாறாதபுண்கள், குடல்புண், தீராத கிரந்திநோய், குழந்தையின்மை சிறப்பு மருந்தியல் T.P: 077 321 2740

# விற்பனைக்கு

இலக்கம் 09, யாழ்பாடி வீதியில் சகல வசதிகளுடன் கொண்ட வீடுடன் 2¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து 1 km போதனா வைத்தியசாலையில் இருந்து 800m. புகையிர நிலையத்தில் இருந்து 1.4 km தூரத்தில் இக்காணி அமைந்துள்ளது.

077 900 3780

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

# பொது அறிவித்தல் - 2021

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### 01 ஆதன வரி செலுத்துதல்

2021ம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்). பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்) பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கவும்.

மேலும் ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

### 02 ஆதனப் பெயர்மாற்றம் செய்தல்

சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு. ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

### 03 காணி உப பிரிவிடுதல்

பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போது உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை மேற்கொள்ளவும்.

### 04 கட்டட அனுமதி வழங்கல்

(1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள். மதில்கள். எல்லைத்தூண்கள். தொலைத்தொடர்பு கோபுரங்கள். மலசலகூடங்கள். குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

(2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(3) அனுமதி பெற்று கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச. தனியார் கட்டடங்கள். மதில்கள். எல்லைத்தூண்கள். தொலைத்தொடர்பு கோபுரங்கள்.மலசலகூடங்கள் குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

### 05 வீதி ஒழுங்கைப்பேணல்

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள். மற்றும் புல்பூண்டுகள். அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்ற வற்றை அகற்றி துப்பரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப்போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தினைத் தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப்பேணும் சைகை குறியீட்டுப்பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நட க்கும் படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

### 06 வியாபார அனுமதிப் பத்திரம் - 2021

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர். நடமாடும் வாகன வியாபாரம். முச்சக்கர வண்டித்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2021ம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2021ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2021ம் திகதிக்குள் செலுத்தி 2021ம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

### 07 இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை

எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள். மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

### 08 துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம்

2021ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

### 09 சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

### 10 பட வரைஞர்களைப் பதிவு செய்தல்

2021ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும். ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021ம் ஆண்டு மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு / புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும்.

### 11 விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத் தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2021ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்..

## செலுத்த வேண்டிய விளம்பர கட்டணங்கள் விபரம்

| இல | விபரம் | மூன்று மாதங்களிற்கான கட்டணம் | ஒரு வருடத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| i | கொடி விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 20.00 | 100.00 |
| ii | சுவர் விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| iii | ஒளியூட்டப்படாத விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| v | ஒளியூட்டப்பட்ட விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 100.00 | 200.00 |

இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2021ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

### 12 திண்மக் கழிவுகளை அகற்றுதல்

வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் புதைத்தோ எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களைத் தரம்பிரித்து. பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 13 நீர்வழங்கல் சேவை

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உப பணிமனைகளில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 14 கனரக வாகன சேவை

மலக்கழிவு மற்றும் திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை. Backhoe Loader என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

### 15 கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்

பொதுமக்கள் மற்றும் வியாபார. அரச. தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 16 பொதுப்பயன்பாட்டு சேவைகள்

சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள். ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### 17 மயானங்கள்

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சுடுகாடுகளில் பூதவுடலினை தகனம் செய்வதற்கான கட்டணமாக ரூபா 1000.00 எமது உப அலுவலங்களில் (வாரநாட்களில் உப அலுவலகத்திலும். வார இறுதி. விடுமுறை நாட்களில் உப அலுவலக பொது நூலகத்திலும்) செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளவும்.

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட இடுகாடுகளில் பூதவுடலினை நல்லடக்கம் செய்பவர்கள் உப அலுவலகங்களில் (வாரநாட்களில் உப அலுவலகத்திலும். வார இறுதி. விடுமுறைநாட்களில் உப அலுவலக பொது நூலகத்திலும்) அனுமதியினைப் பெற்று பூதவுடலினை நல்லடக்கம் செய்து கொள்ள முடியும்.

* இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள். கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**அ. ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்**
**04.01.2021**

***தொலைபேசி இலக்கங்கள் :***

**தலைமை அலுவலகம் - 021 225 6647**
**மானிப்பாய் பட்டினம் - 021 225 5382**
**மானிப்பாய் கிராமம் - 021 225 5379**
**பண்டத்தரிப்பு பட்டினம் - 021 225 2021**
**பண்டத்தரிப்பு கிராமம் - 021 225 2022**

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம்
04 . 06 . 1958

மறைவு
18 . 12 . 2019

## பரயோகலிங்கம் உதயறஞ்சன்

அப்பாவுக்கு,

ஓடி உருண்டது உங்களைப் பிரிந்து ஓராண்டு அப்பா !
வாடி வதங்குகின்றோம் எண்ணி நிதம் அப்பா!
ஓராண்டுடன் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள்
என்றென்றும் நிலைத்திருக்கும் அப்பா!

குடும்பத்தினர்.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08.05.1929
மறைவு 18.12.2019

கடந்த 18.12.2019 அன்று
அமரத்துவமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர்
## ஐயாமுத்து இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய இலிகிதர்
சுகாதார திணைக்களம்)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வும் அவரது இல்லத்தில் இன்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
077 524 5699
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.


# தேர்தல் ஆணைக்குழு

## வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

### தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு - 2020

**பாதியளவில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களும் மீள்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்களிலும் தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விசேட அறிவித்தல்.**

வட மாகாணத்தின் கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட தேருநர்களிற்கிடையே தற்போது உண்மையாக வாழ்கின்றவர்களின் பெயர்களை, 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப் பத்திரங்களை வட மாகாணத்தில் வதிந்துள்ளவர்கள் வடமாகாணத்தில் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங் களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய மாவட்டங்களில் வதிந்துள்ளவர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து குறித்த விண்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இந்த விண்ணப்பப்படிவங்களை www.elections.gov.lk இணையத் தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி 2021 சனவரி 05 ஆந் திகதியிலிருந்து 2021 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையாகுமென்பதுடன், விண்ணப்பப் பத்திரங் களை பிழையின்றி பூர்த்தி செய்து தாங்கள் தற்சமயம் வதிந்திருக்கும் பிரிவின் கிராம அலு வலரின் பரிந்துரையோடு உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு 2021 பெப்ரவரி 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

மேலும், கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் வதிந்திருந்து ஏற்கனவே தொழில்/ கல்வி/ வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் தகவல்களையும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தில் உட்சேர்த்து அவர்களின் நெருங்கிய உறவினரொருவரால்/ அட்டர்னி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவரொருவரால் கையொப்பமிட்டு 2021 பெப்ரவரி 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும். முழுக் குடும்பமாக வெளிநாடு சென்றிருந்தால் அந்த நபர்களின் விண்ணப்பம் குறித்த நாட்டின் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தினூடாக 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந்தேதிக்கு முன் கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கவும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு, J/238 கட்டுவான், J/240 தென்மயிலை, J/241 வருத்தலைவிலான், J/242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வாசவிலான் கிழக்கு, J/245 வாசவிலான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டிதுறை தெற்கு, J/249 தைட்டி வடக்கு. J/250 தைட்டி மேற்கு. J/251 மைலிட்டிதுறை வடக்கு. J/252 பலாலி தெற்கு . J/253 பலாலி கிழக்கு. J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேல், J/256 பலாலி மேற்கு | | |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு | | |
| | பச்சிளைப்பள்ளி | KN 92 இத்தாவில் | KN 93 முகமாலை | KN 94 வேம்போட்கேணி |
| மன்னார் | முசலி | MN 153 முள்ளிகுளம் | | |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தரையிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் : 011-2868441,42,43
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய.
2021.01.01

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2369437 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2369438 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொணராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருக்கோணமலை | 026-2222304 | | |

**சரியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்**


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08 • 07 • 1943

இறப்பு
05 • 01 • 2015

## அமரர்
## சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே
- சென்றீர்கள்

ஆண்டுகள் ஆறு பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்

மனைவி - மலர்மாலை
கனகசிங்கம்

# ஆனந்தம் தொலைந்து ஆண்டொன்று..!



மண்ணில் 07.09.1969

விண்ணில் 18.12.2019

அமரர்

## திருமதி தேவராஜா ஆனந்தி

திதி: சப்தமி (05.01.2021)

துன்பமேதும் நெருங்கிடாமல்
நிழல்போல் இருந்தவளே!
கண்ணிமைக்கும் நேரத்திலே
நினைவாக மாறியதேனோ?

ஆனந்திப்பின் பெருநதியே!
அனலிடை நின்னுடல் வேகி
ஆண்டொன்றாகியும்
ஆறாத்துயரேந்திகளாக நாம்!

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

விழிநீருடன்...
குடும்பத்தினர்.


**For Jaffna University Students...**

Rooms for rent nearby Medical and AHSU faculties.
'Naatsaar' (courtyard) house with optimum level of cross ventilation and natural light
High raised opened ventilators (just below roof ridge) in each room give natural ventilation (due to convectional air flow) without mechanical fans. Thus, makes adequate fresh air entry in order to keep zero BOD.
Calm place away from any automobile noise/ smoke.
As you all have to get ready to go out at same time, adequate number of toilets and bathrooms are available.
Exercise facilities – 'Table tennis' and 'Orbi Track' - in order to keep your brains active.
* Only for female students.
**Please call for more detail... 077 294 0340**


# நினைவஞ்சலி

11 ஆம் ஆண்டு 46 ஆம் ஆண்டு



மண்ணில் 03.05.1922

விண்ணில் 05.01.2010

அமரர் **கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**



மண்ணில் 16.03.1927

விண்ணில் 22.12.1974

அமரர் **கனகாம்பிகை சபாரத்தினம்**

தாயாகி எம்மைத் தாங்கிய அன்னையே!
தாயுமானவராய் அரவணைத்த தந்தையே!
வருடங்கள் பல நூறு ஆனாலும் என்ன
வற்றாது ஊற்றெடுக்கும் உங்களது நினைவுகள்!
மாறாது மறையாது உயிர் எம்மில் உறையும் வரை!

"திலக வாசம்"
தபாலக வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
இல.5, கல்லடி வீதி, சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்



## குமாரசாமி (பொன்னையா) கண்மணி

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கண்மணி நேற்று (04.01.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-இராசம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் (பொன்னையா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - முத்துப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரதீபனின் அன்புத் தாயாரும், யோகநாதன் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் பகவதி, நாகேந்திரம், ராசாத்தி, சந்திராராஜா (பாலு-கனடா), நகுலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகுந்தலாதேவி சந்திராதேவி, கந்தசாமி, முத்துலட்சுமி, நவரத்தினம், மதிவதனி (கனடா), பத்மாவதி (கனடா) காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கிருஸ்ணபிள்ளை நடராசா மற்றும் சிவக்கொழுந்து ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீத்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மலர்வு 19.09.1958



உதிர்வு 31.12.2020

## திருமதி அருந்தவம் கலாமணி (சுசீலா)

"கலாலயம்" வல்வெட்டி தர்மகுலசிங்கம் வாசிகசாலையினை பிறப்பிடமாகவும் ரொரண்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவம் கலாமணி (சுசீலா) அவர்கள் 31.12.2020 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர்களான செல்வன்- நாகியின் அன்புப் புத்திரியும், அமரர்கள்ான காசிப்பிள்ளை-சின்னம்மாவின் மருமகளும், அருந்தவத்தின் (கனடா) பாசமிகு மனைவியும், செந்தூரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-பருத்தித்துறை) செந்தாரகா (கனடா), செந்தீபன் (கனடா), பகலவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரத்தினம், அமரர் சண்முகரத்தினம், நாகரத்தினம் (சுவிஸ்), செல்வரத்தினம் (அப்பாச்சி-கனடா) ஆகியோரின் சகோதரியும், சுதர்சன் (கனடா), உதயலோஜினி (ஆயுர்வேத வைத்தியர்) ஆகியோரின் மாமியும், பிரவீனா, பிரணீஸ், மகிழவன், அபிராம், அபிலயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.01.2021 இலங்கை நேரப்படி பி.ப 11.30 மணிக்கு ரொரண்டொ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ப. அருந்தவச்செல்வம் (மருமகன்)**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**(கிளிநொச்சி)**

**077 773 4633**

## பல்கலை....

மான அடிப்படையில் நீக்கப்பட்டுள்ளது. தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடையை நீக்கக் கோரி மாணவர்கள் 7 பேரும் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் முன்பாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுபட்டனர். அவர்களைச் சந்தித்த துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, மனிதாபிமான அடிப்படையில், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவர்களுக்கான வகுப்புத் தடை விலக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் என சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி எஸ். ராஜ்உமேஸ் தெரிவித்தார்.

அதேவேளை, மாணவர்கள் நேற்று இரவு வரை தங்களின் போராட்டத்தை கைவிடாது தொடர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## சுமந்திரன்...

ளேன் என்று வவுனியாவில் செய்தியாளர்கள் மத்தியில் கூறினார் என்று ஊடகங்களில் படித்தேன். சுமந்திரனின் இந்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. இது அப்பட்டமான பொய்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைபை தான் தயாரிக்கவில்லை. வேறு யாரோ தான் தயாரித்துள்ளார்கள் என்பதை அறிந்ததும் நான் இணக்கம் தெரிவித்துள்ளேன் என்று வேடிக்கையான கருத்துக்களை தெரிவித்துள்ளார் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல இந்தக் கடித விவகாரம் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்துவரும் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றன. சுமந்திரன் எனது பார்வைக்காக எனக்கு அனுப்பிய கடிதத்தை தான் வரையவில்லை என்றும் புலம்பெயர் அமைப்பு ஒன்றே வரைந்தது என்றும் கூறிவருகிறார். எது உண்மை எது பொய் என்பது எனக்கு தெரியாது. ஆனால், இந்தக் கடித்தை எனக்குத் தந்தது சுமந்திரனே. எனக்கு இந்த வரைபைத் தந்த சுமந்திரன், அதனைத் தயாரித்தது வேறு யாரோ என்பதாக குறிப்பிட்ட ஞாபகமுமில்லை. "நாங்கள்" என்ற பதத்தைப் பாவித்ததாகவே எனக்கு நினைவு.

சுமந்திரன் எனக்கு அனுப்பிய வரைபை நான் பகிரங்கப்படுத்தவில்லை. அதற்கு நான் அளித்த பதிலையே பகிரங்கப்படுத்தினேன். இவ்வாறு நான் பகிரங்கப் படுத்தியதனால்தான் அவரது கபடத்தனமான முயற்சி முறியடிக்கப்பட்டது. நான் என் பதிலைப் பகிரங்கப்படுத்தியமை காரணமாக அரசு நாம் என்ன செய்கின்றோம் என்று விழித்துக்கொண்டு விட்டது என்று நகைப்புக்கிடமான கருத்துக்களைக் கூறி வருகிறார். உண்மையில் சுமந்திரனின் வரைபு அரசைக் காப்பாற்றும் ஒரு முயற்சி. சுமந்திரனின் கருத்துடன் உடன்பட மறுத்து பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கூட்டாக ஒரு வரைபை தயாரித்து அனுப்பி இருந்தார்கள். அந்த வரைபில் சர்வதேச நீதிமன்றம் (நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும்), நீதிக்கான சர்வதேச நீதிமன்றம், சர்வதேச சுயாதீன விசாரணை போன்ற அடிப்படையான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த வரைபுக்கு நான் இணக்கம் தெரிவித்துள்ளேனே தவிர சுமந்திரனின் வரைபுக்கு அல்ல.

அதேவேளை, மனித உரிமைகள் சபை ஆணையாளர் மற்றும் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பும் பொருட்டு மிகவும் இறுக்கமான ஒரு வரைபை தயாரித்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இணக்கம் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இதேவேளை, வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் மனித உரிமைகள் சபை தொடர்பிலான பொதுவான வரைபு ஒன்றைத் தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று அறிகின்றேன். இது நல்ல விடயம். மூன்று கட்சிகளுக்கும் இடையே இது தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு என்னால் ஆன ஒத்துழைப்பை வழங்குவேன். அந்த வரைபு எது என்று இதுவரையில் தெரியாது. ஆனால், அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பதற்கு நான் தயார் இல்லை. - என்றுள்ளது. (த)

## பொறுப்புக்....

விட்டன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மூன்று தடவைகள் ஒப்புக்கொண்டார். அதன் பின்னரே, ஜெனீவா விவகாரம் தொடர்பில் ஓரணியில் பேசுவது தொடர்பில் ஆராய்வதற்கு நாம் இணங்கினோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் 'உதயன் பத்திரிகைக்கு' தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

2012ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்பில் வெளிப்படுத்திவரும் நிலைப்பாடு சரியானது என்பதை சுமந்திரன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் இலங்கை அரசின் இணக்கம் இல்லாமல் ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார். தாம் நல்லாட்சி அரசின் காலத்தில் அவர்களின் இணக்கத்துடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்று நம்பி அவகாசம் வழங்கினோம், அது தோல்வியில் முடிவடைந்தது என்றும் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊடாக பொறுப்புக் கூறல் விவகாரத்தை முன்னெடுக்க முடியாது என்பதையும் சுமந்திரன் ஒப்புக்கொண்ட பின்னரே, ஜெனிவா விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு நாம் இணக்கம் தெரிவித்தோம். என்றார். (ஒ-5)

## ஐ.நா....

டம் முன்வைக்கவுள்ளோம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது. இதனை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கொள்வது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ப.சத்தியலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் மற்றும் மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

ஜெனீவாவில் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கட்சிகள் எடுப்பது தொடர்பில் கொழும்பில் நாளை மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் எந்த அடிப்படையில் இதன் நகர்வுகள் அமையப் போகின்றன என்பது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேட்டபோது-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஊடாக இலங்கையின் பொறுப்புக் கூறல் விவகாரத்தை நிறைவேற்ற முடியாது. தொடர்ந்தும் இலங்கை விவகாரத்தை அங்கு வைத்திருப்பதன் ஊடாக எந்தப் பலனும் இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை கொண்டு செல்லவேண்டும் என்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் கேட்கப் போகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கப் போகின்றோம். இந்த விடயத்தை உள்ளடக்கி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்த ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அது சிறப்பாகவும் அமையும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக் கூறல் விவகாரம் முடக்கப்படக் கூடாது என்பதே எமது இலக்கு என்றார். (ஒ-5)

## சிகிச்சைக்கு....

நேற்று 4ஆம் திகதி மந்திகை ஆதார மருத்துவமனையில் தடிமன் மற்றும் காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் சேர்க்கப்பட்டார். அவர் மருத்துவமனையின் 7ஆம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அந்த முடிவு நேற்றுக் கிடைத்த நிலையில், இளைஞருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் பருத்தித்துறை, புலோலியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவராவார். இவர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்றார். இவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதில் தெளிவில்லாத நிலைமை காணப்படுகின்றது.

அவரிடம் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில், அவர் 3 தினங்களுக்கு முன்னர் மருதனார்மடம் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. அங்குள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றுக்குச் சென்றார் என்றும், அருகில் உள்ள கடை ஒன்றில் தண்ணீர் வாங்கிக் குடித்தார் என்றும் சுகாதாரப் பிரிவினரிடம் கூறியிருக்கின்றார்.

தொற்று ஏற்பட்டு 3 நாள்களுக்குள் இவ்வாறான அறிகுறிகள் தென்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு என்பதால் தொற்று எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகங்கள் உள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் கூறுகின்றனர்.

இவரது குடும்பத்தினரைத் தனிப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், தொற்றாளர் நடமாடிய இடங்களை இனங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

தொற்றாளர் மந்திகை மருத்துவமனையின் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ள நிலையில், அந்த விடுதியில் பணியாற்றிய மருத்துவர் ஒருவரும் தாதியர்கள், சிற்றூழியர்கள் என 7 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளர் பருத்தித்துறை, நெல்லியடி, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களுக்கு சென்றுள்ளார் என்று தெரியவருகின்றது. அவருடன் தொடர்புடையோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-26)

## கர்ப்பிணிக்கு...

மேற்கொள்ளப்பட்டது. பி.சி.ஆர். சோதனை முடிவு நேற்று வந்த நிலையில் அதில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் தொற்றுடன் இனங்காணப்பட்ட மாணவரின், சகோதரின் மனைவிக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர் வசிக்கும் வவுனியா, வேப்பங்குளத்தின் சில பகுதிகள் முடக்கப்பட்டன. அந்தப் பகுதிக்குள் உள்நுழையவும், அங்கிருந்து வெளிச்செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளனர். (எ-110,18,26)

## ஜெய்சங்கர்...

தம்மை ஜெய்சங்கர் சந்திக்கவுள்ளார் என்பதை கூட்டமைப்பின் தலைவர் உறுதிப்படுத்தினார். இலங்கையில் சீனத் தலையீடுகள் அதிகரித்துவரும் நிலையில் அண்மையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இலங்கைக்கு திடீரென வந்து சந்திப்புக்களை நடத்தியிருந்தார். இந்த நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகின்றார்.

புதிய ஆண்டு பிறந்துள்ள நிலையில், இலங்கைக்கு வரும் மிக முக்கியமான வெளிநாட்டு ராஜதந்திரியின் பயணமாக ஜெயசங்கரின் வருகை அமைகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பில் இன்று இலங்கை வரும் ஜெயசங்கர் நாளைமறுதினம் 7ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இருதரப்பு உறவுகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் இந்தப் பயணத்தின்போது அவர் கலந்துரையாடுவார் என இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்ற வழமையான கரிசனைக்குரிய விடயங்களுக்கு மேலதிகமாக, கடந்த் சில ஆண்டுகளாகத் தாமதமடைந்துவரும் கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய விவகாரம் இந்தப் பயணத்தில் முக்கிய கவனம் பெறும் என்று இந்திய அரசியல் ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உடன்படிக்கை 2017ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டபோதும் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை ஆரம்பிப்பதில் இந்தியாவை உள்ளடக்கிச் செயற்படுவதில் காண்பிக்கப்படும் தாமதம் தொடர்பாக இந்தப் பயணத்தில் அதிக கரிசனை செலுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அண்மைக்காலமாக ஆளும் தரப்பு அரசியல்வாதிகளும், கடும்போக்கு சிங்கள பௌத்த மதத் தலைவர்களும் மாகாண சபை முறைமைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துவரும் நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் மிக்க ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மீது புதிய பிரேரணை கொண்டுவரப்படவுள்ள பின்னணியும் இந்த வருகையை எதிர்பார்ப்பு மிக்க ஒன்றாக மாற்றியுள்ளது. (எ-22)

## வடக்கில்....

பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொது மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெறும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருக்கு ஏற்கனவே அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களை விட, தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும், தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-26)

## பாஸ்...

போர்க் காலத்தில் கடற்றொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் பாஸ் எடுக்க வேண்டுமென்றும், கடலுக்குள் செல்லும் படகுகளுக்கு வருடத்துக்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் தெரிவித்து மீனவர்களை அச்சுறுத்திய கடற்படையினர் அதே நடைமுறையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான ஆவணங்கள் இன்றிக் கடலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் அப்பியாசக் கொப்பிகள் வாங்கித் தர வேண்டும் என்றும், பனை மட்டைகள் வெட்டித் தர வேண்டும் என்றும் கடற்படையினர் நிர்ப்பந்திக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த வருடத்துக்கான உரிமத்தைப் பெறாத படகுகளை கடலுக்குள் செல்ல அனுமதிப்பதில்லை. வருடம் பிறந்து நான்கு நாள்களுக்குள் உரிமத்தைப் பெற வேண்டும் என்று கடற்படையினர் கூறுவதால் உரிமம் பெற அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-9)

## வல்வெட்டித்துறை...

ட்டுள்ளது. இந்திய மீனவர்கள் படகுக்குள் ஏறித் தாக்கினர் என்று தனது முறைப்பாட்டில் வல்வெட்டித்துறை மீனவர் குறிப்பிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த குறித்த அப்புலிங்கம் போதன் (வயது-49) என்ற மீனவரே நேற்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே ரோலரில் வந்த இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஊறணி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஆரம்பகட்டச் சிகிச்சைகளுக்குப் பின்னர் அவர் மந்திகை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-26)

## கொரோனா சாவு...

கள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

71 மற்றும் 86 வயதுடைய ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 215 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 202 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## மயங்கி...

சங்கத்தானையில் நேற்று நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் சௌந்தரம் என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் வீட்டில் மயங்கி வீழ்ந்ததை அடுத்து, அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மூதாட்டியின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சு-9)

## கருத்துரிமையை...

டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை மீது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படத்தைப் பிரசுரித்தமைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அறிகின்றோம். ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிகக் கடுமையான தாக்குதலாகவே கருத வேண்டியுள்ளது.

பிரபாகரன் தொடர்பாக இலங்கையிலுள்ள தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் அனைத்திலும் பல்வேறுபட்ட மொழிகளில் வெளிவரக்கூடிய சமூக வலைத்தளங்களிலும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் படங்களும் வந்து கொண்டேயிருக்கின்றன. சிங்கள அரசியல் கட்சிகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் தேர்தலில் வெற்றிகொள்வதற்காக பிரபாகரனையும் ஈழ விடுதலைப் போராட்டத்தையும் இன்னமும் பேசுபொருளாகவே வைத்திருக்கின்றனர். அது மாத்திரமல்லாமல் நாடாளுமன்றத்திலும் கூட நாளாந்தம் இது குறித்து பேசப்படுகின்றது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் உதயன் பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்வது என்பது அர்த்தமற்றதும் கேலிக்குரிய விடயமுமாகும்.

இலங்கை அரசு ஒரு இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதாக எதிர்க்கட்சிகளும் பரவலாக சிங்கள தமிழ் அரசியல் கட்சியினரும் குற்றம் சுமத்தி வருகின்றார்கள். பாகிஸ்தானைப் போன்று ஒரு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் அரசியல் துறை, ஊடகத்துறை அனைத்தும் கொண்டுவரப்படுகின்றது என்ற அச்சம் எல்லோர் மத்தியிலும் தோன்றியிருக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு ஜனநாயக நாட்டுக்கு ஆரோக்கியமானதாக இருக்க முடியாது. கருத்துரிமையைத் தடை செய்வது கண்டிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

அரசு இத்தகைய கண்மூடித்தனமான நடவடிக்கைகளை உடனடியாக கைவிட வேண்டும். ஜனநாயகத்தின் மேல் அக்கறை கொண்ட நாட்டின் ஒற்றுமைபாட்டின்மீது அக்கறை கொண்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனநாயகவாதிகள் அனைவரும் இதனைக் கண்டிக்க முன் வரவேண்டும். - என்றுள்ளது. (ஒ-5)

# அசாஞ்சேயை ஒப்படைக்க பிரிட்டன் மறுப்பு

லண்டன், ஜன.5

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடியாது என லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மன ஆரோக்கியம் தொடர்பான கோரிக்கைகளை பரிசீலித்த நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

49 வயதுடைய ஜூலியன் அசாஞ்ச் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் நடந்த போர்கள் தொடர்பான அமெரிக்க இராணுவ இரகசிய ஆவணங்களை வெளியிட்டார் என்று அமெரிக்காவால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

அவர் ஈக்குவடோரில் தஞ்சம் அடைந்திருந்த நிலையில், அந்த நாடு அடைக்கலத்தைக் கைவிட்டதை அடுத்து அவர் கடந்த வருடம் பிரிட்டனால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து அமெரிக்கா அவரை தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. அது தொடர்பான வழக்கிலேயே பிரிட்டன் நீதிமன்றம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது. (எ-இ)

English Classes
Gr-1 to O/L
Grammar With Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 331 4608

HONDA
RATNAM BROTHER'S
MAKE YOUR MARK...


KILINOCHCHI - 076 7719 197
JAFFNA - 077 734 0056
VAVUNIYA - 077 301 7779

## மரண அறிவித்தல்



### திருமதி சுந்தரம்மா பெருமையினார்
### (கலட்டக்கா)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.05 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரை வசிப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்மா பெருமையினார் அவர்கள் 03.01.2021 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கந்தையா-சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்ற பெருமையினார் (சந்தக்கடை- சின்னத்துரை-நெடுந்தீவு) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான வேலாயுதம் - சிவகாமிப்பிள்ளையின் அருமை மருமகளும், இராஜேஸ்வரி (கிளி) காலம்சென்ற கணேசலிங்கம்(கணேஷ்), மகாலிங்கம் (சந்தக்கடை லிங்கம்) காலம் சென்ற சிவபாக்கியம் (சந்திரா), காலம்சென்ற அமிர்தலிங்கம் (மூர்த்தி), நவமலர்(மலர்), நிர்மலாதேவி (ராணி), காலம்சென்ற புஷ்பராணி (வனிதா), [illegible]லிங்கம்(அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கையிலாயப்பிள்ளை , சந்திரவதனி, சந்திராதேவி, நெடுஞ்செழியன், சிவஞானம், வாணி ஆகியோரின் அருமை மாமியாரும், காலம்சென்ற குமாரசுவாமி மற்றும் கணபதிப்பிள்ளை , நல்லம்மா, இலட்சுமி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும், தங்கம்மா, காலம் சென்றவர்களான வள்ளியம்மை கதிராசிப்பிள்ளை, வைத்தியநாதர், பத்மினிப்பிள்ளை, கண்மணி குமாரசுவாமி ஆகியோரின் மைத்துனியும், சிவாஜினி, கோபிராஜ், அனுஷியா, அபர்ணிஜா, ரஜித்தா, துசித்தா,மதுரா, அஜந்தினி, அபிக்குமார், ஐஸ்வரியா, மணாளினி, மயூரன், நிரோஷன், அர்ச்சுனா, அஞ்சனா, அர்த்தனா, சோபிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், ஆரா, அஷ்வின், சஹானா, ஓவியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2021) மதியம் 1.00 மணிக்கு நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
கிளி (மகள்) - 0094 7722 986 52
லிங்கம் (மகன்) - 0044 757 7040 446
ராணி (மகள்) - 0044 746 6617 397
மலர் (மகள்) - 0044 7459 2424 34
அப்பன்(மகன்) - 0044 795 6808 148

தகவல்
குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.